நளன் சரிதம்.

NALAN CARITAM

CONNEMARA PUBLIC LIB
7 - JUL 1956
MADRAS

எழுதியவர்

அ. சே. சுந்தரராஜன், B. A.,

இராமநாதன் கல்லூரி,

சுன்னாகம், இலங்கை.

By
Cuntararājan (Acē)

(2)

இலங்கை,

தபால், வானொலி மந்திரி

கனம் சு. நடேச பிள்ளை, B. A., B. L., F. R. E. S., அவர்களது

முன்னுரையுடன் கூடியது.

All Rights Reserved.

விலை] 1954. [சதம் 75.

RB NO 484
1-54

சாரதா விலாஸ பிரஸ்,
கும்பகோணம்.

55492
031,1G50,Ny8
J4

7 - JUL 1956
MADRAS

இலங்கை

தபால், வானொலி மந்திரி

கனம் சு. நடேச பிள்ளை, B. A., B. L., F. R. E. S., அவர்களது

முன்னுரை.

கம்பராமாயணத்தை மாணவர் கற்பதற்கு உதவியாக ஏற்கனவே 'கம்பர் கவிதைக் கோவை', 'இராம காதை' என்னும் நூல்களை வெளியிட்ட திரு. அ. சே. சுந்தரராஜன் நளவெண்பாவின் சாரம் எனத் தரும் இந் நூலை எழுதியுள்ளார். இது புகழேந்திப் புலவரது கதையமைப்பு விளங்கும் முறையில் நளன் சரிதையைத் தெள்ளிய இனிய நடையிற் கூறுவது. உரைநடைப் பகுதியில் தரப்பட்ட செய்யுள்களின் நயங்களை மாணவர் அறிதற்கு உதவியாக விளக்கவுரையும் சேர்க்கப் பட்டுளது. புகழேந்திப் புலவரது கவித்திறத்தை இந் நூல் மாணவர்களுக்கு ஏற்ற வகையில் உணர்த்து கின்றது.

இராமநாதன் கல்லூரி,
சுன்னாகம்,
6—1—1954.

சு. நடேச பிள்ளை.

7 - JUL 1956
MADRAS

பொருள் அடக்கம்.

	முன்னுரை	i
1.	வியாச முனிவன் உதிட்டிரனைக் காணுதல்	1
2.	நாடு, நகரம், அரசன்	3
3.	நளன் அன்னத்தைக் கண்ணுற்றமை	4
4.	அன்னம் தூதுரைத்தல்	7
5.	நளன் தூது செல்லல்	8
6.	சுயம்வரம்	10
7.	இன்ப வாழ்க்கை	12
8.	சூதாட்டம்	14
9.	நகர் நீங்கியமை	16
10.	மக்களைப் பிரிந்தமை	17
11.	தேவியைப் பிரிந்தமை	20
12.	தமயந்தியின் துயரம்	22
13.	சேதிநகரஞ் சேர்தல்	25
14.	நளனது உரு மாற்றம்	28
15.	கலி நீங்கியமை	31
16.	நளன் மக்களைக் காணுதல்	34
17.	கலி வரமளித்தல்	36
18.	நகரடைதல்	38
	செய்யுள் பொருள் விளக்கம்	40—72

7 - JUL 1956

நளன் சரிதம்.

---

1. வியாச முனிவன் உதிட்டிரனைக் காணுதல்.

பாண்டவருள் மூத்தவனாகிய உதிட்டிரன் குரு நாட்டைச் செங்கோல் நெறி தவறாது ஆட்சிசெய்து வந்தான். வீரம் நிறைந்த அவ்வரசன் பொறுமைக்குப் பெயர்பெற்றவன்; வாய்மைக்கு மூவுலகிலும் ஒப்பவர் இல்லாதவன். கண்ணபிரானது ஆருயிர் நண்பனாய் அமைந்த அப்பெரியோன் மெய்த்திரு வந்துற்றாலும் வெந்துயர் வந்துற்றாலும் ஒத்திருக்கும் உள்ளத்து உரம் படைத்தவன்.

யாவராலும் நன்கு மதிக்கப்பெற்ற அம்மன்னர் மன்னவன் துரியோதனன் சூழ்ச்சியால் ஒரு சமயம் சூதாடித் தனக்குரிய நாடு நகரம் செல்வம் முதலிய எல்லாவற்றையும் இழந்து கானகஞ் செல்ல நேரிட்டது. காட்டில் வாழ்ந்துவரும்பொழுது தன் தம்பி அருச்சுனனைச் சிவபெருமானிடம் பாசுபதம் முதலிய தெய்வப் படைகளைப் பெறும்பொருட்டுக் கைலை மலைக்கு அனுப்பினான். நாடிழந்த துயரத்தோடு தம்பியைப் பிரிந்த கவலையும் ஒன்றுசேர மனவாட்டத்துடன் இருந்தவனிடம் ஒருநாள் வியாச முனிவன் வந்தான். உலகின் அகவிருளை நீக்கும்பொருட்டுப் பலவாறு பின்னிக்கிடந்த நான்கு வேதங்களையும் முறைப்படுத்திக் கோத்த, தூய உள்ளம் படைத்த அவ் அருந்தவனை எதிர்கொண்டு அடி பணிந்து அரசன் முகமன் கூறலானான்.

உதிட்டிரன்:—வேத முதல்வனே! நீ இங்கு வரப்பெற்றமையால், பிறவித்துயரம் முற்றும் நீங்கப் பெற்றேன் யான்.

முனிவன்:—எது வந்தாலும் கலங்காத அரசனே! உன் மனம் வருந்தியிருக்கக் காரணம் யாது?

உதிட்டிரன்:—என் இன்னுயிர்த் தம்பியைக் கைலைக்குப் பெருமான் படைபெறத் தனியே அனுப்பினேன்; அக்கவலைதான்.

முனிவன்:—காண்டா வனத்தைத் தீக்கடவுள் உண்ண உதவி, தேவர்கள் ஓட்டெடுக்கும்படி செய்தவனுக்கு அவனது இரண்டு தோள்களைவிட வேறு துணையும் வேண்டுமோ? கவலை ஒழிவாயாக.

உதிட்டிரன்:—பேரரசும் எங்கள் பெருந்திருவும் கைவிட்டு, அடைதற்கரிய கானகம் வர யாது காரண மெனத் தெரிகிலேன்.

முனிவன்:—எந்தப் பெரிய செல்வமும் அழிதற்குக் காரணமாகிய சூதாடல் மன்னவர்க்கு இயல்பு தானே. அது பற்றி மனங் கலங்கலாமோ?

உதிட்டிரன்:—அறிவு கெட்டு, வஞ்சனையே உருவமான சூதாடி, மண்ணிழந்து வனம் நண்ணி என்னைப் போலத் துன்பத்தை விலைக்கு வாங்கிய அரசரும் உண்டோ?

முனிவன்:—ஏன் இல்லை? உன்னைப் போன்ற பேரரசனாகிய நளன் என்பவன் எல்லாவற்றையும் ஒருங்கிழந்தான்; கலியினால் விளைந்த அக் கதையைச் சொல்லுகிறேன்; கேட்பாயாக.

2. நாடு, நகரம், அரசன்.

உலகிலுள்ள சிறந்த நாடுகளுள் முதலாவதாக வைத்து எண்ணத்தக்கது நீர்வளம் நிலவளம் மிக்க நிடத நாடு. தெய்வத் தன்மை வாய்ந்த கங்கை நதி பாயப்பெற்ற அந் நாட்டிலுள்ள தடாகங்களில் தாமரை முதலியன மலர, கயல் மீன்கள் புரளும்; வாய்க்கால்களில் வரால் மீன்கள் தம்மீது ஏறுதலால் எருமைகள் நீரைக் கலக்க, அலை எழுந்து கரைகளில் மோதும்; வயல்களில் வாளை மீன்கள் துள்ளி விளையாடும். பலவிடங்களிலும் பூக்களின் மணங் கமழும் சோலைகள் அழகுடன் காணப்பட்டன. நெருங்கிய கதிர் களையுடைய செந்நெல் விளையும் வயல்கள் செறிந்திருந்தன. அந்நாட்டில் மலர்களினின்றும் வெளிப்பட்ட தேனுக்கு அளவில்லை; மீன்களும் சங்குகளும் அத்தேனை உண்டு களிக்கும். அங்கு கடல்படு முத்தினோடு கரும்பினின்றும் தோன்றிய முத்தும், சங்குகள் ஈன்ற முத்தும் உண்டு. எங்கும் காணுதற்கினிய அழகிய இயற்கைக் காட்சிகள் மலிந்த அந் நன்னாடு பூமிதேவியின் கண் போன்று விளங்கிற்று.

அத்தகைய நாட்டின் தலைநகராக விளங்கியது அழகிய சோலைகள் சூழ்ந்த மாவிந்தம் என்னும் வள நகரம். அந் நகர மாடங்கள் வானளவும் ஓங்கி உயர்ந்தன; அவற்றின் உச்சியிற் கட்டப்பட்ட கொடிகள் தென்றற் காற்றினால் அசையும். எல்லா ஞானக் கலைகளும் சிறப்புற்று விளங்கிய அந் நகரில் யாவருக்கும் நூலாராய்ச்சியே பொழுது போக்கு; அம் மக்கள் அறியாத கலைகள் இல்லை; அங்கு இல்லாதது வறுமை; கல்லாதது கரவு; கேளாதது துன்ப அழுகுரல்.

எப்பொழுதும் இயல்பாகவே நேரிய வழியில் ஒழுகும் அம் மக்களிடம் எந் நிலைமையிலும் மனக் கலக்கம் என்பதில்லை.

இத்தகைய நகரிலிருந்துகொண்டு நிடத நாட்டை நளன் என்னும் செங்கோல் வேந்தன் இனிது ஆண்டு வந்தனன். அழகிலும், அருளுடைமையிலும், வாய்மையிலும், சீலத்திலும், வீரத்திலும் எவ்வுலகிலும் அவனுக்கு ஒப்பாகச் சொல்லவல்ல அரசர் இலர். நாட்டு மக்களது முழு அன்பையும் கவர்ந்த அம்மன்னவனது ஆட்சியில் யாவரும் எவ்விதமான பகைமையும் இல்லாமல் ஒரு குலத்தவரைப்போன்று அன்புற்று இனிது வாழ்ந்து வந்தனர். அந்நாட்டில் கிளியும் பருந்தும் ஒரு கூட்டில் ஒன்று பட்டு வாழ்ந்து வந்தன என்றால் அவன் ஆட்சியின் தனிச்சிறப்பைப் பற்றிக் கூறவும் வேண்டுமோ?

சீத மதிக்குடைக்கீழ்ச் செம்மை அறங்கிடப்பத்
தாதவிழ் பூந்தாரான் தனிக்காத்தான்—மாதர்
அருகூட்டும் பைங்கிளியும் ஆடற் பருந்தும்
ஒருகூட்டில் வாழ உலகு. 1

3. நளன் அன்னத்தைக் கண்ணுற்றமை.

இளவேனிற் காலம் வந்தது. தென்றற் காற்று பூவினது தேனைப் பல விடங்களிலும் நீர் தெளித்தாற் போன்று வீசிற்று. ஒருநாள் நளன் மாவிந்த நகரின் சூழலில் உள்ள மரங்கள் அடர்ந்ததொரு சோலைக்குப் பூக்களை நாடிச் சென்றான்.

சூரியனுக்கு அஞ்சி இருள் குடியிருந்தாற் போன்ற சோலையினுள்ளே சென்றபின் திடீரென்று சோலையின் நிறம் விலக ஒரு பொய்கை தென்பட்டது; அதன் நடுவில் ஒரு தாமரை மலரில் ஓர் அழகிய அன்னப் பறவையை அரசன் கண்ணுற்றான். அதன் அழகு அரசன் மனத்தைக் கவர்ந்தது. அவன் அப்பறவையைப் பிடித்துத் தரும்படி கூறினான். பணிப் பெண்கள் அப் பட்சியை வளைத்துப் பற்றிக்கொண்டு தம் அரசன் முன் வைத்தனர். வைத்தலும் அன்னம் தன் கிளையைத் தேடிக் காணாமையால் மலங்கிற்று; அரசனைக் கண்டு கலங்கிற்று.

இங்ஙனம் அதுபடும் தடுமாற்றத்தை உணர்ந்த இரக்கமுள்ள அரசன் "அஞ்சாதே அழகிய அன்னமே! உனது நடையழகின் சிறப்பினைக் காணும்பொருட்டுப் பிடித்ததன்றி வேறில்லை" என்று கூறினான்.

"அஞ்சன் மடவனமே உன்தன் அணிநடையும்
வஞ்சியனையார் மணிநடையும்—விஞ்சியது
காணப் பிடித்ததுகாண்" என்றான் களிவண்டு
மாணப் பிடித்ததார் மன். 2

அரசன் சொற்கேட்டுத் தடுமாற்றம் நீங்கி மனந் தேறிய அன்னம் அவனை நோக்கி, "வெண்குடை வேந்தனே! எல்லா வகையிலும் உனக்கு இசைவானவள், மூங்கில் போன்ற தோளையுடைய தமயந்தி என்னும் அணங்கு ஒருத்தி இருக்கின்றாள்" என்று சொல்லிற்று. அம்மொழி கேட்டதும் கேளாததும் அரசன் மனம் முழுவதும் அக்கன்னி வசமாய்விட்டது. அந்நிலையில் அவன், "சொன்ன கன்னி யாருடைய மகள்?" என்று வினவ, அன்னம் கூறலாயிற்று:—

"அரசனே! அவள் வளப்பம் வாய்ந்த விதர்ப்ப நாட்டரசன் மகள்; நுண்ணிய இடையினள்; இளம் பிறை ஒத்த நெற்றியினள்; தேனினும் இனிய மொழியினள்; பெண்களுக்குரிய அழகு குணம் முதலிய எல்லா நன்னலங்களும் பூரணமாக வாய்க்கப் பெற்ற பெண்ணரசி."

"நாற்குணமும் நாற்படையா ஐம்புலனும் நல்லமைச்சா
ஆர்க்குஞ் சிலம்பே அணிமுரசா—வேற்படையும்
வாளுமே கண்ணா வதன மதிக்குடைக்கீழ்
ஆளுமே பெண்மை அரசு." 3

இவ்வாறு கூறக் கேட்ட அரசன், "அன்னமே! நீ உரைத்த அன்னத்தை உன்னவே எனது ஆவி சோரும். உனக்கு அவளோடு உள்ள தொடர்பு எத்தகையது?" எனக் கேட்டான். அன்னம், "யாம் அவளிடம் நடை கற்கும் பொருட்டு வந்தடைந்தோம்" என்றுரைத்தது. அது கேட்ட மன்னவன் மனம் அழிந்தது; காதல் மிக்கது; மானம் அற்றது; நாணம் அழிந்தது. அந்நிலையில், "இனி யான் உயிர் வாழ்தல் என்பது உனது வாய்ச் சொல்லிலே தங்கியுள்ளது" என்று கூறினன். அன்னம், "அரசனே! அக் கன்னியை நீ அடையும்படி செய்வேன்" என்று உறுதி கூறி, தமயந்திபால் விரைந்து சென்றது.

அன்னம் போனபின் காதல் நெருப்பு மூள, அரசன் கண்ட ஒவ்வொரு காட்சியும் கேட்ட கன்னியின் நினைவை உண்டாக்கிற்று. அதனால் ஆற்றாது பெருந் துன்பம் அனுபவித்து அப்புள்ளின் வரவை ஆவலுடன் எதிர்நோக்கியபடி இருந்தான்.

4. அன்னம் தூதுரைத்தல்.

அரசனால் அனுப்பப்பட்ட அன்னம் தமயந்தி இருக்குமிடம் அடைதலும் அவள் ஒரு தனியிடஞ் சேர்ந்து, "வந்த காரியம் யாது?" என்று வினவினாள். அன்னப் பறவை கூறலுற்றது:–"செம்மையான மனம், இரக்கம், அழகு முதலிய எல்லா நற்குணங்களையும் உடைய நளன் என்னும் வாய்மை வேந்தன் என்பால் உளன். யாவரினுஞ் சிறந்த அவ்வரசனே உனக்கு எல்லா வகையிலும் ஏற்றவன். திருமாலே அவனுக்கு ஒப்பாகச் சொல்லலாமேயன்றிப் பூவுலக அரசர் எவரையும் ஒப்புக்கூற இயலாது."

"செம்மனத்தான் தண்ணளியான் செங்கோலான்
மங்கையர்கள்
தம்மனத்தை வாங்குந் தடந்தோளான்—மெய்ம்மை
நளனென்பான் மேனிலத்தும் நானிலத்தும் மிக்கான்
உளனென்பால் வேந்தன் உனக்கு. 4

"அறங்கிடந்த நெஞ்சும் அருளொழுகு கண்ணும்
மறங்கிடந்த திண்டோள் வலியும்—திறங்கிடந்த
செங்கண்மால் அல்லனேல் தேர்வேந்தர் ஒப்பரோ
அங்கண்மா ஞாலத் தவற்கு." 5

அன்னம் மொழிந்த மொழி அப்படியே தமயந்தியின் மனத்தைக் கவர, அவள் ஒளியிழந்து வாட்டமுற்றாள். அப்பறவை நளன் அடைந்த காதல்நோய் முழுவதையும் கூறிற்று; அதைக் கேட்டவள் அகம் உருகி அறிவு மயங்கினாள். அந்நிலையில், "அழகிய அன்னமே! சோலையிலே நின் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் தேர் வேந்தனுக்கு எனது நிலைமையைச்

சொல்லுவாய்; சொல்லி எனது உயிரை உவந்தளிப்பாய்" என்று பதைபதைத்துச்சொன்னாள். அன்னம், "நீ அஞ்ச வேண்டாம்; அவ் வேந்தனை நீ நிச்சயம் அடையும்படி செய்வேன்" என்று கூறி விடைபெற்று நளன்பால் சென்றது.

தமயந்தியின் நிலைமையைக் கண்ட தோழியர், பெற்ற அன்னைக்கு வேறுபாட்டை உணர்த்தினர்; அவள் அரசனுக்கு உரைத்தாள். அவன் வந்து பார்த்து, நிலைமையை அறிந்து, திருமணம் செய்ய எண்ணி, ஏழாம் நாள் சுயம்வரம் என்று ஓலை போக்கினான். தூதுவர் பல நாடுகளிலுஞ் சென்று முரசறைவிக்க, எல்லா நாட்டு அரசர்களும் விதர்ப்பன் திருநகரை அடையலாயினர்.

நிற்க: வழிமேல் விழிவைத்து, தமயந்தியின் நினைவாகவே இருந்த நளன், வானத்தில் மேகங்களைக் கிழித்துக்கொண்டு அன்னம் வருதலைக் கண்டான். அதற்குப் பலவித உபசாரஞ்செய்து, "அரச அன்னமே! அழிகின்ற எனதுயிரை நீ உவந்து அளித்தாய். முன்பு கூறிய தேன்மொழி நங்கைக்கு எல்லாம் நலந்தானே?" என்றான். அப்புள் தான் போனதும், அவள் அடைந்த நிலைமையும் ஆகிய எல்லாம் சொல்லிற்று. கேட்ட அரசனுக்கு உள்ள அறிவும் அழிந்தது; நெருப்பிலிட்ட தளிர்போன்று விரக வேதனையினால் வருந்தலாயினான்.

5. நளன் தூது செல்லல்.

வீம ராசன் தூதுவர் நிடத நாட்டை அடைந்து சுயம்வரநாள் இன்னதென்று அரசனுக்கு உரைத்தனர். நளன் தேர் ஏறி விதர்ப்ப நாட்டை நோக்கி விரைந்து சென்றான்.

இஃது இங்ஙனமாக; வீணையில் வல்ல நாரத முனிவன் வாயிலாக தமயந்தியின் சுயம்வர நாளைப்பற்றி இந்திரன் அறிந்தான். மலைகளை வச்சிரப் படையினுல் சிறகரிந்த தேவர்கோன், வருணன் முதலிய யாவரும் தமயந்தியின் மணமாலையைப் பெற விரும்பி விதர்ப்ப ராசன் நகரை நோக்கிச் சென்றனர். தமக்கு எதிரில், விரைவாக வந்துகொண்டிருந்த நளனைக் கண்டனர். அப்பொழுது இந்திரன் அம்மன்னவனை நோக்கி, "எங்களுக்கு நீ ஓர் உதவி செய்யவேண்டும்" என்றனன். அவனும் இன்னதென்பதை உணராமலே அதற்கு இசைந்தான். தேவர் தலைவன், "தேர் வேந்தனே! மணமாலையை எங்களில் ஒருவருக்குச் சூட்டும்படி வீமன் மகளிடஞ் சென்று தூதுரைப்பாயாக" என்றுன். அச்சொற்கேட்டதும் நளன் தான் தமயந்திபால் கொண்டிருந்த ஆசையைக் கோதாக வென்றுன். அவன் மனம் ஒரு கணம் தேவர் பணியிலும் மறுகணம் இளங் கன்னிபாலும் ஊசலாடித் திரிந்தது. எனினும் ஈற்றில் அவ்வரசன், தன் மனத்தெழுந்த காதலை அடக்கிக்கொண்டு, "தேவர் கோவே! என்னுலாகும் ஒரு கருமத்தையே உரைத்தாய்; அதைச் செய்ய ஆயத்தமாய் இருக்கிறேன். ஆனுல் காவல் கடக்கும் வழி யாது?" என்று வினவினுன். அதற்குத் தேவேந்திரன், "ஒருவரும் உன்னைக் காணமாட்டார்: நீ போய் அம்மங்கையைக் கண்டு வருவாய்" என்றுரைத்தான்.

விடைபெற்ற நிடதர் கோமான் குண்டினபுரத்தின் பெரிய வீதிகளூடே சென்று கன்னிமாடம் புகுந்து தமயந்தியைக் கண்டான். அவளும் அவனைக் கண்டாள். கண்டவ்வள் மனத்தில் அன்புணர்ச்சி பெருகலாயிற்று; அது எல்லை கடவாதபடி நாணம் தடுத்தது. அந்

நிலையில், "காவலைக் கடந்து கன்னிமாடம் புகுந்த நீ யாவனோ? தேவனோ? விஞ்சையனோ? உள்ளபடி கூறுக" என்று அவள் வினவினாள். தூது சென்ற மன்னவன் தன் மனத்தில் கொழுந்துவிட்டெரியலுற்ற ஆசையாகிய நெருப்பைத் தன் செம்மையென்னும் தண்ணீரால் அவித்து, தான் தேவர்பொருட்டு வந்ததைக் கூறித் தன் நாட்டையுஞ் சொன்னான்; பின்பு, "ஏதோ சொன்னேன் என்று என் வார்த்தையை இகழாது தேவர் தலைவனுக்கே மாலை சூட்டுவாயாக" என்றுரைத்தான். அதற்கு வீமன் மடந்தை, "அரசனே! வகுத்த சுயம் வரந்தான் உன்பொருட்டு என்று நினைப்பாயாக" என்று கூறி, "மண மண்டபத்திற்குத் தேவர்களும் நீயும் மற்றவர்களோடும் எழுந்தருள்க" என்று சொல்லி முடித்தாள்.

திரும்பி வந்த நளன் இந்திரனைத் தொழுது தான் தமயந்தியிடம் தூதுரைத்ததும், அவள் சொன்னதும் ஆகியவற்றையெல்லாம் உள்ளதுள்ளபடி கூறினான். அவனது நேர்மையை வியந்த தேவர்கள் அவனுக்குச் சில வரங்களை உவந்தளித்தனர். "நெருப்பு, தண்ணீர், பூ, ஆடை முதலியவற்றுள் எதனையும் விரும்பிய பொழுது நிச்சயம் பெறுவாய்" என்று இந்திரன், வருணன், முதலிய தேவர்கள் வரம் ஈந்தனர்.

6. சுயம்வரம்.

தூதுவந்த காதலன் போனபொழுதே தமயந்தியின் நெஞ்சமும் அவன் பின்னே சென்றது; அதனால் அறிவு கலங்கி உயிர் சோர்ந்தாள். அப்பொழுது சூரியன் மறைந்தான். மல்லிகை மலர் முல்லை மலர்கள் தென்றற்

காற்றில் அசைய அந்திமாலே வந்தது. அதனைக் கண்டு அஞ்சிய அணங்கினை, அந்திக்காலம் பல்லைத் திறந்தாற் போன்று பிறைச்சந்திரன் தோன்றிமேலும் துன்புறுத்த லாயிற்று. நிலவு நெருப்பைப் போன்று அவளை நலிய லுற்றது. நிலவுக்குரிய காலம் முடிய இருள்வந்து, அடர்ந்தது. 'கொள்ளிக்கும் விள்ளாத கூர் இருளினுல்' அவள் பட்ட துன்பம் சொல்லுந்தரமன்று. யாவரும் உறங்கினர்; ஆனுல் விரக வேதனையால் வெதும்பிய தமயந்தி மாத்திரம் ஒரு கணப்பொழுதும் துயில் என்ப தின்றி, இரவு முழுவதும் பெருமூச்சு விட்டபடி பெருந் துன்பமுற்ருள்.

பல ஊழிக்காலம் ஒன்று சேர்ந்து நீண்டாற் போன்ற பெரிய இரவும் ஒருவாறு முடிந்தது; தமயந்தி யின் ஆழ்துயரமும் நீங்கும்படி பொழுது புலர்ந்தது. சூரியன் உதித்தான். முரசறைந்த ஏழாம் நாள் எல்லா அரசர்களும் சுயம்வர மண்டபமடைந்தனர். தமயந்தி யைப் பெறுதற்குத் தவஞ் செய்த நளனும் யாவருக்கும் நடுவிலே வீற்றிருந்தான்.

தமயந்தி அம்மண்டபத்தின் பந்தரின்கீழ் வந்தாள். விழித்த கண் இமையாது மன்னவர் அமர்ந்திருந்த மணி மண்டபத்தினுள்ளே புகுந்தாள். உடன்வந்த தோழியர் அச்சபையிலுள்ள அரசரது பெயர், நாடு முதலியவற்றை யெல்லாம் கூறலாயினர். பொன்னி நாடாளும் சோழன், குடநாட்டுக்குரிய சேரன், பரவை பணிந்த பாண்டியன், குருநாடர் மன்னன், மத்திர நாடன், மச்சநாடன், அவந்தி நாடாள்வோன், பாஞ்சாலர் மன்னன், கோசல நாட்டரசன், மகதர் கோமான், அங்கநாடுடையான், கலிங்கர் கோமான், கேகய நாட்டு வேந்தன், காந்தார

நாடன், சிந்து நாட்டரசன் முதலியவர்களையெல்லாம் ஒவ்வொருவராகக் காட்டக் கண்டு, பின்பு இந்திரன் முதலிய தேவர்கள் நால்வரும் நளனுருவம் கொண்டு அவ்விடம் இருந்ததைக் கண்ணுற்றாள்; அவள் மனம் ஊசலாடிற்று. அந்நிலையில் அவள் தன் வழிபடு கடவுளை மனத்தில் நினைந்து அன்னம் சொன்னவனையே தான் மாலையிடும் வண்ணம் அருள் செய்யும்படி வேண்டினாள். கண் இமைத்தலாலும், கால் நிலத்தில் தோய்தலாலும், அழகிய மாலை வாடுதலாலும் உண்மை நளனை அவள் அறிந்து அவனுக்கே மாலை சூட்டினாள்.

அப்பொழுது உருவம் மாறி நின்ற விண்ணரசர் யாவரும் வெள்கி மனம் உளைந்தனர்; உலகிலுள்ள நல்லோர் களிப்பு மிக்கனர். மண்ணரசர் மனமயங்கினர்; அவர்களது செந்தாமரை முகம் வெண்தாமரையாய் வெளுத்தது.

விண்ணரச ரெல்லாரும் வெள்கி மனஞ்சுளிப்பக்
கண்ணகன் ஞாலங் களிகூர—மண்ணரசர்
வன்மாலை தம்மனத்தே சூட வயவேந்தைப்
பொன்மாலை சூட்டினாள் பொன். 6

திண்டோள் வயவேந்தர் செந்தா மரைமுகம்போய்
வெண்டா மரையாய் வெளுத்தவே—ஒண்டாரைக்
கோமாலை வேலான் குலமாலை வேற்கண்ணாள்
பூமாலை பெற்றிருந்த போது. 7

7. இன்ப வாழ்க்கை.

தமயந்தியின் மணமாலை பெறாது ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்ற விண்ணரசர் கலிபுருடனை எதிரே

கண்டனர். இந்திரன், "நீ இங்கு வரக் காரணம் என்?" என்று வினவினுன். கலி, "நானும் உங்களைப்போல விதர்ப்பன் மகளை விரும்பி வந்தேன்" என்று கூறினுன். வானவர் தலைவன், "மன்னவருள் நளனே அக் கன்னியின் மண மாலையைப் பெற்ருன்; ஆதலால் நீ உன் கருத்தை ஒழித்துத் திரும்புவாயாக" என்று சொன்னுன். அது கேட்ட கலி கோபங் கொண்டு, "விண்ணரசர் இருக்கும் பொழுது மண்ணரசரை விரும்பி மாலையிட்ட மடமாதின் எண்ணத்தைக் கெடுத்து அவள் கேள்வனுக்கும் கீழ்மை அளிக்கின்றேன்" என்று மொழிந்தான். இந்திரன் நளனது வாய்மை, செங்கோல், தூய்மை முதலியவற்றையும், தமயந்தியின் கற்பின் மேன்மையையும் எடுத்துரைத்தான். கலி, "அவர்கள் இருவரும் சேர்ந்திருக்கத் தரியேன்; எப்படியும் அவர்களைப் பிரிப்பேன்; நீங்களும் என்னுடன் சேர்வீர்களாக" என்று சொன்னுன்.

பின்பு கணித நூலோர் குறித்த நன்னுளில் நளனுக்கும் தமயந்திக்கும் திருமணம் நடைபெற்றது. விதர்ப்பன் நகரிலேயே சில காலம் இனிது வாழ்ந்தனர். பின்பு நிடதர் கோமான் தேவியுடன் தேரேறித் தனது நாட்டுக்குப் புறப்பட்டான்.

போகும்பொழுது வழியிலுள்ள மலர்ச்சோலைகள் பொய்கைகள் முதலியவற்றின் இனிய காட்சிகளையெல்லாம் தமயந்திக்குக் காட்டியபடி சென்றுன். இரு காதலரும் இடைவழியிலுள்ள நீர் நிலைகளிலும், ஆறுகளிலும் குடைந்தாடி, தூய கங்கையிலும் நீராடி, ஒரு அழகிய சோலையை அடைந்து அங்கே சிறிது தங்கினர். பின்பு கங்கையின் மறுகரையை அடைந்து, மாவிந்த

நகரின் அருகிலுள்ள ஒரு மலர்ச் சோலையை அடைந்தனர். அச் சோலையிலிருந்தபடியே உயர்ந்த மாடங்களை யுடைய தன் நகரை நளன் தமயந்திக்குக் காட்டி, "இது தான் எங்கள் நகர்" என்றான்.

தனது நகரையடைந்த நளன் எப்பொழுதும் போல் நெறி தவறாது செங்கோல் செலுத்தி வந்தான். தன் காதலியுடன் பொய்கையும், வாசப் பொழிலும், அழகிய அருவியும், செய்குன்றும் ஆகிய இடங்களுக்கு அடிக்கடி சென்று இன்புற்று மகிழ்ந்தான்.

இங்ஙனம் பன்னிரண்டு ஆண்டுகளை இனிது கழித்தான். இக்காலத்தில் தமயந்தி இரண்டு குழந்தைகளைப் பெற்றெடுத்தாள். இல்வாழ்க்கை எல்லா வகையாலும் சிறப்பாக நடைபெற்றது.

8. சூதாட்டம்.

முன்கூறிய பன்னிரண்டு ஆண்டளவும் பிழை காண்பதில் வல்லவனான கலியும் வாய்மை நெறி தவறாது ஒழுகிய நளனிடம் எவ்விதமான பிழையும் காண இயல வில்லை. அக்கால எல்லை முடிவில் அவ்வரசன் கால் கழுவும்பொழுது ஒரு சிறு பகுதி நீரினால் நனையாமல் நின்றுவிட்டது; அந்த மறுவைக்கண்ட கலி, அதனையே காரணமாகக்கொண்டு நளன் மனத்தைத் தன்வயப் படுத்தி அவனைச் சேர்ந்தான். சேர்ந்து அன்னவன் தமயன் புட்கரனுடன் போய் இருந்தான்.

புட்கரனுக்கு நளனுடைய நாட்டையும் அரசினை யும் சூதாட்டத்தில் வாங்கித் தருவதாகச் சொல்லி

அவனை அழைத்தான். அவனும் ஓர் எருதின்மீது ஏறிக்கொண்டு, உயர்த்தியதொரு கொடியுடன், தன் நாட்டைவிட்டு நீங்கி, கங்கையைக் கடந்து, மாவிந்த நகரிலே புகுந்தான். புக்கவன் நளனுக்கு முன்னே செல்ல, அம்மன்னவன், "நீ எடுத்த கொடி என்ன கொடி?" என்று வினவினன். அவன், "மிடற் சூது வெல்லுங்கொடி" என்று விடை கூற, வீர உணர்ச்சி மிக்க வாய்மை வேந்தன், "அப்படியானால் உன்னோடு சூதாட இசைந்தோம்" என்று மொழிந்தான்.

அப்பொழுது நளனது மந்திரிமார் சூதாட்டத்தினால் வரும் தீமைகளைப் பற்றி பலப்பல சொல்லி அரசனைத் தடுக்கத் தம்மால் ஆனமட்டும் முயன்றனர். அவர் கூறியவற்றையெல்லாம் கேட்ட அரசன், "நான் முன்னமேயே மனமொப்பிச் சூதாட வாக்களித்துவிட்டேன்; ஆதலால் விளைவது நன்மையானாலும் தீமையேயானாலும் சரி; நீங்கள் குறுக்கிடவேண்டாம்" என்று கோபத்துடன் கூறினான்.

" தீது வருக நலம்வருக சிந்தையால்
சூது பொர இசைந்து சொல்லினோம்—யாதும்
விலக்கலிர் நீர்" என்றான் வரால்ஏற மேதி
கலக்கலை நீர் நாடன் கனன்று. 8

பின்பு நளனுக்கும் புட்கரனுக்கும் இடையில் சூதாட்டம் ஆரம்பித்தது. நளன் தன் மணிப் பூணாரத்தை ஓட்டமாக வைத்தான்; புட்கரன் தான் ஏறி வந்த ஏற்றினைப் பணயமாகக் கூறினான். கலி சூதாடு கருவியாய்த் தமயனுக்குச் சார்பாய்ப் புரண்டான்; புட்கரன் வென்றான். இவ்வண்ணமே நளன் மேலும்

மேலும் ஆடிப் பலதிறப்பட்ட நிதிகளையும், ஆயிரக் கணக்கான குதிரை, தேர், காலாள், யானைப்படை களையும், அடிமை மகளிரையும் ஒன்றன்பின் ஒன்ருகத் தோற்ருன். ஈற்றில் புட்கரன் தமயந்தியையும் பணய மாக வைத்து ஒரு முறை சூதாடும்படி கேட்டான். அதற்கு நளன், "இனிச் சூதொழிந்தோம்" என்று கூறியபடி எழுந்து, தேவியுடன் அவ்விடம் விட் டகன்ருன்.

9. நகர் நீங்கியமை.

தன் நாடு முழுவதையும் கொடியவனுகிய புட்கர னுக்குத் தோற்று, மனைவியுடன் நளன் காட்டை நோக்கி நடக்கலாயினுன். அது கண்டு மனம் பொருத நகர மக்கள் தம் கண்ணீரால் தம் அரசன் பாதங்களைக் கழுவிநின்று, "நீ எங்களை இப்படி ஒரு கொடியவனிடம் காட்டிவிட்டுச் செல்லலாமோ?" என்று சொல்லி மனம் வருந்தினர். அதற்கு நளன் பின்வருமாறு கூறினுன்:— "கடல் பொங்கி உலகில் உள்ளிட்டாலும், வேத நெறி சிதைந்தாலும், உலகிலுள்ள பெரியோர் நடுவு நிலைமை தவறினும் செங்கோலரசர் சீலத்தைக் கைவிடார்; சொன்ன சொல் தவறி நடவார்."

"வேலை கரையிழந்தால் வேதம் நெறிபிறழ்ந்தால்
ஞாலம் முழுதும் நடுவிழந்தால்—சீலம்
ஒழிவரோ செம்மை உரைதிறம்பாச் செய்கை
அழிவரோ செங்கோ லவர். 9

இங்ஙனம் கூறக்கேட்ட நகர மாந்தர், "அங்ஙன மாயின் இன்று ஒரு நாளாவது இங்கே தங்கி நாளை எழுந்தருள்க" என்று அவன் காலில் விழுந்திரைத்

தனர். நளன் தமயந்தியின் ஆற்றுமையை மனத்தில் வைத்து, மாந்தர் மனமுருகி விடும் கண்ணீரைக் கண்டு, தேவியை நோக்கி, "இன்று இந்நகரில் இருப்போமா?" என்று கேட்டான். அச்சமயம் புட்கரன், "மாநகரில் யாரேனும் நளனைக் கொண்டாடினுல் அவர்களைக் கொல்லுக," என்று பறையறைவித்தான். நளன் அப் பறையொலி கேட்டு மனம் நைந்து, "இத்துன்பம் இந் நகருக்கு என்பொருட்டால் வந்தது" என்று சொல்லித் தன் மனைவி மக்களோடு நகர வாயிலைக் கடந்து சென்ருன். முரசறைவித்த புட்கரன் வெற்றியுணர்ச்சி யோடு வீற்றிருந்தான்; ஆனுல் நளன் பிரிவினுல் நகரி லுள்ள குழவிகளும் பாலுண்ணுது ஏங்கின.

10. மக்களைப் பிரிந்தமை.

தன் மக்கள் இருவரோடு தமயந்தியையும் அழைத் துக் கொண்டு நளன் காடு நோக்கி நடக்கலானுன். நகர வாயிலைக் கடந்ததும் மகனும் மகளுமாகிய அம்மக்கள் தாமரை மலரையும் பச்சிளந் தளிரையும் ஒத்த மென்மை யான பாதங்கள் நோவ, மனம் பதைத்துருகி, அரசனை நோக்கி, "எந்தையே! நாம் நடக்கவேண்டிய வழியை எல்லாம் கடந்துவிட்டோமோ?" என்று அழுதபடி வினு வினர். எப்பொழுதும் செவ்விய செயலையே புரிகின்ற அவ்வேந்தன் களங்கமற்ற தன் மக்கள் படும் துயரை நோக்கினுன். சூழ்ந்து நின்ற மாயவிதியின் வலிமை யையும் எண்ணினுன். யாதுந் தெரியாது சித்திரம்போல் நின்றிட்டான். பின்பு ஒருவாறு தன்னைத் திடப் படுத்திக்கொண்டு, தமயந்தியை நோக்கி, "பெண்ணே! நம் காதல் மக்களையும் உடன்கொண்டு கானகஞ் செல்லு தல் பல துன்பங்களுக்கு இடந்தரும். ஆதலால் நீ இவர்

களை அழைத்துக்கொண்டு வீமன் திருநகருக்குச் செல்லுவதே நலம்" என்றுரைத்தான். அது கேட்ட தமயந்தி, மழைபோற் கண்ணீர் உகுத்து, மனம் நொந்து, "கொற்றவனே! குற்றமில்லாத நல்ல அழகிய மக்களைப் பெற்றுக்கொள்ளலாம்; ஆனால் குலமகளுக்குக் காதலரசனைப் பெற முடியுமோ?" என்று மொழிந்தாள்.

அதற்கு நளன் மக்கட்பேற்றின் சிறப்பைப் பற்றிக் கூறலுற்றான்:—"வஞ்சகம் முதலிய தீய குணங்களை யெல்லாம் அறவே நீக்கி, மனத்தூய்மையோடு செய்தற்கரிய தவத்தைச் செய்தாலும் களங்கமில்லாத மக்களைப் பெறாதவர் வானவர் உலகம் புகப்பெறார். மேலும் தம் அழகினாலும் செய்கையினாலும் பெற்றோர் அறிவை மயக்குகின்ற மக்கட்பேறில்லாதவர், மற்றெல்லாச் செல்வமுடையவராயினும் ஒன்றை உடையவர் ஆவரோ? தம் அருமை மக்களின் பால்மணங் கமழும் மழலைமொழி கேளாதவர் எல்லாக் கலைகளிலும் மூழ்கியவராயினும் அவற்றின் பயனை இழந்தவரேயாவார்."

கைதவந்தான் நீக்கிக் கருத்திற் கறையகற்றிச்
செய்தவந்தான் எத்தனையுஞ் செய்தாலும்—மைதீர்
மகப்பெறா மானுடர்கள் வானவர்தம் ஊர்க்குப்
புகப்பெறார் மாதராய் போந்து. 10

"பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனும்மற்று
என்னுடைய ரேனும் உடையரோ—இன்னடிசில்
புக்களையும் தாமரைக்கைப் பூநாறும் செய்யவாய்
மக்களையிங் கில்லா தவர். 11

"சொன்ன கலையின் துறையனைத்தும் தோய்ந்தாலும்
என்ன பயனுடைத்தாம் இன்முகத்து—முன்னம்
குறுகுதலைக் கிண்கிணிக்கால் கோமக்கள் பால்வாய்ச்
சிறுகுதலைக் கேளாச் செவி." 12

நளன் கூறியதையெல்லாங் கேட்ட தமயந்தி, "நாடு நகரிழந்தமை யாவருக்குந் தோற்றுதபடி எங்கள் நகருக்குப் போந்தருள்வாயாக" என்று கூறினுள். அது கேட்ட நளன், "பெண்ணே! செல்வரிடம் சென்று ஒன்றை இரத்தல் ஒருவனுடைய தானத்தைத் துடைத்து மானத்தையும் அழிக்கும்; மேலும் மன்னராய் மன்னர்தமை அடைந்து பெருவாழ்வு பெற்று அமுதமுண்டு களித்திருப்பினும், அப்படி இருப்பவர் ஒன்று ஆண்மையற்றவர்; இன்றேல் பித்தரல்லவா?" என்று மொழிந்தான். தமயந்தி, "செங்கோலாய்! உன் திருவுள்ளம் ஈதாயின் எங்கோன் விதர்ப்பன் நகருக்கு நம் அழகிய காதலரைப் போக்கியருள்" என்று அவர்மாட்டு அன்பில்லாதவரைப் போன்று கூறினுள்.

பெற்றதாய் பிரியவும் அவளை விட்டுப் பிரிய மனமில்லாத பேரன்பினையுடைய தன் மக்களை வீமராசனிடம் சேர்க்கும்படி ஒரு மறையவனிடம் சொன்னுன். அப்படிச் சொல்லும்பொழுது நளனது கலங்காத உள்ளமும் கலங்கிற்று; மனத்தை வாட்டிய கண்ணீரை அடக்கியபடி நின்ருன். அப்படி நின்ற தந்தையின் திருமுகத்தைப் பார்த்து, தம்மைப் பெற்றெடுத்த தாயின் மதிமுகத்தை எதிர்நோக்கி, "எங்களையும் வேருக அனுப்புகின்றீர்களோ?" என்று விழிவழி ஒழுகிய கண்ணீர் ஆருகப் பெருக அழுது சொல்லினர். அது கேட்டு நெஞ்சுருகிய தமயந்தி கண்ணீரால் மஞ்சனமாட்டித் தன் மக்களை மார்போடும் அணைத்துவிட்டாள். இருவர் உயிரையும் இருகையினுல் வாங்கி ஒருவன் செல்லுவது போன்று கோமைந்தனையும் இளையகோதையையும் கொண்டு மறையவன் வீமன் நகருக்குச் சென்ருன். நளன் பிரிவாற்ருமையால் கண்பார்வை காதலர்மீது

ஓட, ஊதைக் காற்றைப்போன்று பெருமூச்சு ஓட, யாதும் உரையாடாது மனம் ஒடுங்கி நின்றான்.

11. தேவியைப் பிரிந்தமை.

கயல்மீன்கள் புரளும் நீர்நிலைகள் மலிந்த அழகிய நாட்டைக் கடந்து நளன் தேவியோடும் நடந்து சென்று கள்ளியும் பாம்பும் துள்ளிவேகின்ற பாலை வனத்தைக் கண்டான். அப்பொழுது கல்நெஞ்சனாகிய கலியும் நளனை வஞ்சிக்கும் பொருட்டு ஒரு புள் வடிவங் கொண்டு அவன் முன்னாக இருந்தான். அச்சமயம், பொன்மானைப் பிடித்துத் தரும்படி சீதாபிராட்டி இராமபிரானைக் கேட்டது போன்று, தமயந்தி நளனை நோக்கி அந்த அழகிய பொன்மயமான பட்சியைப் பற்றித் தரும்படி தொழுது கேட்டாள்.

தேன்பிடிக்குந் தண்டுழாய் செங்கட் கருமுகிலை
மான்பிடிக்கச் சொன்ன மயிலேபோல்—தான்பிடிக்கப்
பொற்புள்ளைப் பற்றித்தா என்றாள் புதுமழலைச்
சொற்கிள்ளை வாயாள் தொழுது. 13

பொற்புள்ளைப் பிடிக்கும் பொருட்டுச் சென்றான் நளன். அப்புள் அவன் கைக்குள் வருவது போன்று வரும்; ஆனால் அருகே சென்று பற்ற முயன்றால் அகப் படாது கழன்று ஓடும். இப்படி யெல்லாம் ஏமாற்றிப் பின்பு களைப்புற்றது போன்று தோன்றிற்று. வேறு உபாயமின்றி இருவரும் ஒற்றைத் துகிலால் உடை புனைந்து மற்றைத் துகிலால் அப்பட்சியை வளைத்தனர். அப்பொழுது அம்மாயப்புள் வளைத்த துகிலுடன் அந்தரத்தே போய் நின்று, "வேந்தனே! உனது நன்னாடு தோற்பித்தோன் நானே காண்" என்று கூறி மறைந்தது.

அந்நிலையில் தமயந்தி தன் விதியை நினைந்து பெரிதும் வருந்தினாள். வருந்தியவள் அந்த இடத்தைவிட்டு வேறு எங்காயினும் செல்லும்படி நளனை வேண்டினாள்.

அப்பொழுது சூரியன் மறைந்தான். எங்கும் பரந்த காரிருளில் நளன் தன் தேவியொடும் ஒரு பாழ் மண்டபத்தைக் கண்டான். நள்ளிரவானதால் வேறு இடமில்லாமையால் அம்மண்டபத்திலேயே அவ்விரவைக் கழிப்பாராயினர். இருவரும் பெரிதும் வருந்தியபடி ஒருவரை ஒருவர் தேற்றினர். பின்பு ஒரு வாறு துயில் கொள்ளலாயினர்.

கலிபுருடன், தமயந்தியை ஒரு பொழுதும் பிரியாத செம்மையுடைய நளன் மனத்தை வேறுபடுத்தி அவன் அறிவைக் கலக்கினான்; அதன் விளைவாக. அரசன் மனதில் வேறோர் எண்ணம் உதித்தது. அந்தக் கூர் இருளில், தமயந்தியின் துயரத்தைக் காணப்பொறாமல், அவளைத் தனியே விட்டுச் செல்ல எண்ணினான்; இருவருக்கும் ஒன்றாக அமைந்த ஆடையை அரிதற்கு நினைந்தான். அவன் எண்ணியதை முற்றுவிப்பதற்கு வாய்ப்பாகக் கலியும் பக்கத்திலே ஒரு வாளாய்க் கிடந்தான். நளன், உயிர்போன்று ஒன்றாய்க் கிடந்த ஆடையை, அன்பை முற்றும் அரிவது போன்று அரிந்தான்; அரிந்து அவள் நிலைமையை மனதில் ஆராய்ந்தான். மனம் சிறிது பின் வாங்கிற்று. சிறிது தூரம் போவான்; பின்பு மேலே செல்ல மனமின்றி மீண்டு வருவான். இப்படியே பல முறை போவதும் வருவதுமாகி அவன் மனம் தயிர் கடைபவர் கைபோல ஊசலாடிற்று. அந்நிலையில் கலியின் செயலினால் நளன் தன் மனத்தைக் கடினப் படுத்திக்கொண்டு வனத்தில்

உறையும் தெய்வங்களை நோக்கித் தமயந்தியைப் பாது காக்கும்படி சொல்லிவிட்டு, இடையிருளில் தன்னந் தனியே அவளை விட்டுப் பிரிந்து சென்றான்.

12. தமயந்தியின் துயரம்.

பின்பு தமயந்தி சிறிதே விழிப்புற்று, நளனைக் காணாது, மனந்தளர்ந்து, "வேல்வேந்தே! எங்குற்றாய்?" என்று வினவியபடி தனது வளைக்கையை நீட்டினாள். அப்பொழுது ஆடை அரியப்பட்டிருந்ததை அறிந்தாள்; தான் சற்று நித்திரையில் ஆழ்ந்தியமைக்கு மனம் வருந்தி, அடுத்தடுத்து, "மன்னவனே!" என்று அழைத் தாள். அவனைக் காணாது நேர்ந்தது யாதோ என்று நெஞ்சங் கலங்கி, எழுந்து, தரையைத்தடவி, எங்குந் துழாவித்தேடி, எவ்விடத்துங் காணமல், "ஐயகோ!" என்று சொல்லிப் பதறி வீழ்ந்தாள். வேடனது கூரிய அம்பு உருவிய மயில்போன்று பொறுக்கவியலாத துன் பத்துடன் ஓடிக் கண்ணீர் சொரிய, தலையின்மேல் கையை வைத்தபடி, கூந்தல் நிலைகுலைய வீழ்ந்தாள்.

இங்ஙனம் பெண்பாலாகிய தமயந்தி பட்ட துயரத் திற்கு இரங்கி வருந்தி, சூரியனை அழைப்பன போன்று கோழிக்கூட்டமெல்லாம் சிறகடித்துப் பெருங் குரலெடுத் துக் கூவின.

தையல் துயர்க்குத் தரியாது தஞ்சிறகாம்
கையால் வயிறலைத்துக் காரிருள்வாய்—வெய்யோனை
வாவுபரித் தேரேறி வாவென் றழைப்பனபோல்
கூவினவே கோழிக் குலம். 14

தமயந்திக்கு நளன் சென்ற வழியைக் காட்டுபவன் போன்று சூரியனும் மணித்தேர் ஏறித் தோன்றித் தன்

கிரணமாகிய கையைக் கானூடே இருள் விலகும்படி நீட்டினான்.

வான நெடுவீதி செல்லும் மணித்தேரோன்
தான மடந்தைக்குத் தார்வேந்தன்—போனநெறி
காட்டுவான் போலிருள்போய்க் கைவாங்கக் கானூடே
நீட்டுவான் செங்கரத்தை நின்று. 15

கீழே கிடந்த தமயந்தி துன்பம் பொறுக்க மாட்டாது, "நீ இப்படி என்னை விட்டுப் பிரியும்படி யான் செய்த பிழை ஏதேனும் உளதோ?" என்று சொல்லுவாள். பின்பு அவன் நல்வரவை எதிர் நோக்கி, "தேர்வேந்தனே!" என்று அழைப்பாள். அவன் வாராமையினால், "யான் வீழ்ந்துள்ள துயரமாகிய கடலுக்குக் கண்ணுக்கெட்டின மட்டும் கரையைக் காணேன்" என்று கூறுமளவில் களைப்புற்றுச் சோர்வாள். பின்பு சிறிது அறிவு வரப்பெற்று, "யான் இவ்வாறு தத்தளிக்கும் நிலையிலும் 'உனக்கு நேர்ந்தது என்ன? என்று ஒரு வார்த்தை கேளாதது எதனால்?" என்று கூறுவாள். விடையொன்றும் பெறாமையால் அரசன் தன்னை முற்றாகக் கைவிட்டான் என்றுணர்ந்து, "இந்தக் கொடிய கானகத்திலா மன்னவன் என்னை இப்படித் தவிக்க விட்டுச் செல்லவேண்டும்?" என்று சொல்லிக் களைப்பு மேலிட்டு, நெருப்பிலிட்ட கொடிபோல வாடுவாள்.

செய்தபிழை ஏதென்னும் தேர்வேந்தே என்றழைக்கும்
எய்துதுயர்க் கரைகாணேன் என்னும்—பையவே
என்னென்னு தென்னென்னும் இக்கானின் விட்டேகும்
மன்னென்னு வாடும் அயர்ந்து. 16

பின்பு நளனது அடிச்சுவடு தோன்றுதலும் அவள் கண்ணீர் ஆறாகப்பெருக அதன்மீது விழுந்தாள். விழுந்து

அக்காட்டிலுள்ள மயிலையும் மானையும் விளித்து, "என்னைப் பிரிந்த அரசன் போனதிசையை எனக்குக் காட்டமாட்டீர்களோ?" என்று சொல்லிப் புலம்பினாள்.

இப்படிப் பெரிதும் அறிவு கலங்கின நிலையில் ஒரு யானையை விழுங்கியும் பசிதீராத பெருவயிற்றினையுடைய ஒரு மலைப்பாம்பு முன்னே தோன்ற, இன்ன தென ஓராது, அதனருகே சென்றாள். அக்காடு முழுவதும் நெருப்பினை உமிழும் அப்பெரும்பாம்பு மார்பு வரையில் முழுகும்படி அவளை விழுங்கிற்று. அப்பாம்பின் வாய்க்கு இலக்காகி நின்ற தமயந்தி, தான் உயிர் தப்புவது அரிதென்றுணர்ந்து தன் கணவனையும் மக்களையும் நினைந்து புலம்பலுற்றாள்:—"கொடிய பாம்பின் வாயிலே அகப்பட்டு இறப்பதற்கு முன்பு மன்னவனே! உன் தோள்வலியால் என்னை மீட்க மாட்டாயோ? ஒவ்வொரு நாளும் உன் முகவிழி பெற்ற நான், இன்று உன் திருமுகத்தைக் காணப் பெறாமல் உயிர்விடுகின்றேனே! தீவினையேன் பெற்றெடுத்த மக்களே! நீங்களாவது பிரிந்துசெல்லும் மன்னவனைக் காண்பீர்களோ?"

இங்ஙனம் பலவாறு அழுது, ஒருவாறு தன்னைத் தேற்றிக்கொண்டு, "வந்தடைந்த காட்டில் கொடும் பாம்பின் வாய்ப்பட்டு உயிர் போகப்போகின்றது. நாயகனே! எனக்கு விடையருளுக" என்று முகமலர்ச்சியுடன் கைகூப்பி நின்றாள்.

அடையுங் கடுங்கானில் ஆடரவின் வாய்ப்பட்டு
உடையுமுயிர் நாயகனே ஓகோ—விடையெனக்குத்
தந்தருள்வாய் என்னுத்தன் தாமரைக்கை கூப்பினாள்
செந்துவர்வாய் மென்மொழியாள் தேர்ந்து. 17

இவ்வாறு புலம்பிய தமயந்தியின் அழுகைக் குரலைக் கேட்ட வில்வேடன் ஒருவன், குரலைத் தொடர்ந்துவந்து, பாம்பின் வாயில் முழுகுபவளது தெய்வ முகத்தைக் கண்டான். அவள், "கொடிய பாம்பின் விடவாயில் அகப்பட்ட எனக்கு, அபயமளித்து என்னுயிரைக் காப்பீராக" என்றாள். வேடன் பாம்பினைக் கொன்று தமயந்தியை மீட்டான்.

அவள் அவ்வேடனுக்கு முகமன்கூறி நின்றாள். அந்நிலையில் அவன் ஏதோ தன் மனத்தில் நினைந்து அவள் முகம் நோக்கி, "பைந்தொடீ! நீ என்னுடன் வருவாய்" என்று கூறினான். நரகத்திற்கு ஏதுவாய் நின்ற சிலைவேடன் சொற்கேட்ட அவள் விழிபதைத்து, பெருமூச்சு விட்டு, அலமந்து, கண்ணீர் ஆறாக அழுது, கல்லென்றும் முள்ளென்றும் பாராது ஓடலுற்றாள். சிறு மானைத் துரத்திச் செல்லும் தீ உமிழும் கண்ணையுடைய புலியைப்போன்று வேடனும் அவளைப் பின் தொடர்ந்தான். வீமன் பாவை ஓடமாட்டாது உடல் தளர்ந்து, அலமந்து, தன்னைப் பாதுகாத்தற்கு வேறு வகையின்றிச் சீற்றங்கொண்டு விழித்தாள்; அக்கணமே அவளது கற்பழலால் வில்வேடன் எரிந்து சாம்பலாய் நிலத்தில் விழுந்தான்.

13. சேதிநகரஞ் சேர்தல்.

பின்பு தமயந்தி நெருப்புப்பற்றி எரியும் வெம்மை மிக்க அவ்வனத்தில் ஒரு பக்கம் இருந்து பழைய வாழ்வை யெல்லாம் நினைந்து அழுதாள். நளனால் தனக்கு வந்துற்ற தாழ்வுகளுக் கெல்லாம் அவனைக் குறை கூறாமல் தானே காரணம் என்று கருதித் தன் விதியை நொந்து புலம்பினாள்..

அப்பொழுது அக்காட்டிலுள்ள பெருவழியில், ஆராயும் மனப்பான்மையுள்ள ஒரு பெரு வணிகன் போய்க்கொண்டிருந்தான். "இவ்வளவு பாவியா நான்" என்று தமயந்தி சொல்லி அழுத குரல் அவன் காதில் விழுந்தது. குரல் வந்த வழியே சென்று அவளது இலக்குமி போன்ற வடிவத்தைக் கண்டான்; அவள் அவ்விடத்திற்கு வரக்காரணம் யாதோ என ஐயுற்றான்; முடிவில் அவளது உண்மை நிலையை ஒருவாறு உய்த்துணர்ந்து, "நீ எக்குலத்தாய்? யார் மகள்? யாது உனது ஊர்? உன் பெயர் யாது? நீ மனமுருகி அழக் காரணம் யாது? உள்ளதுள்ளபடி உரைப்பாயாக," என்று வினவினான்.

அவ்வளவில் ஆதிப் பெருவழியில் ஆய்வணிகன்
இவ்வளவு தீவினையேன் என்பாள்தன்—மெய்வடிவைக்
கண்டான் ஐயுற்றான் கமலமயிலே என்றான்
உண்டாய எல்லாம் உணர்ந்து. 18

"எக்குலத்தாய் யார்மடந்தை யாதுன்னூர் யாதுன்பேர்
நெக்குருகி நீயழுதற்கு என்னிமித்தம்—மைக்குழலாய்
கட்டுரைத்துக் காண்" என்றான் கார்வண்டு காந்தாரம்
விட்டுரைக்குந் தார்வணிகர் வேந்து. 19

உதவி செய்யும் இயல்புள்ள அவ்வணிகன் கூறியது கேட்ட தமயந்தி, "முன் செய்த வினையினால் முடி மன்னன் என்னைப் பிரிய நேரிட்டது. இக் காட்டில் அன்னவனைத் தேடிக் காணாமையால் அழுகின்றேன்," என்று மனந்தளர்ந்து கூறினாள்.

"முன்னை வினையின் வலியான் முடிமன்னன்
என்னைப் பிரிய இருங்கானில்—அன்னவனைக்
காணா தழுகின்றேன்" என்றாள் கதிர்மைக்கும்
பூணாரம் பூண்டாள் புலர்ந்து. 20

அவள் கூறியதைக் கேட்ட கொடை வணிகன் சேதி நகருக்குச் செல்லும் வழியைக் காட்டி, அங்கே அவளைச் செல்லவிட்டுத் தன் வழியே போயினான்.

அற்ற துகிலும் அருதொழுகு கண்ணீருமாய் அந் நகர வீதியிலே நின்ற தமயந்தியைக் கண்ட பணிப் பெண்கள் சிலர் சேதியரசன் தேவியிடம் செய்தியைத் தெரிவித்தனர். கேட்ட அரசி உடனே அன்னவளைத் தன்னிடம் அழைத்து வரும்படி ஏவ, அவர்களும் தமயந்தியை உடன்கொண்டு சென்றனர். அரசன் தேவி அவளை நோக்கி, "உன்னை இந்நிலையிற்கண்ட எனக்கு மனத்துயர் தீராது; உன்னுடைய உண்மை வரலாற்றை யெல்லாம் கூறுவாயாக" என்று பரிவுடன் கேட்டாள். வீமன் பாவை, "என்னைத் தனியே வனத்தில் விட்டு என் தலைவன் பிரிந்து செல்ல, அன்னவனைக் காணாது அலமருகின்றேன்; இதுவே என் வரவு," என்று வாய் புலர்ந்து, மொழி பதற உரைத்தாள். அத்தேவி, "உன் கணவனை எப்படியாயினும் கண்டுபிடித்து உன்னுடன் அனுப்புவோம்; அவ்வளவும் என்னோடு இங்கு இனி துறைவாயாக," என்றாள்.

தமயந்தி இங்ஙனம் இருப்ப, விதர்ப்ப ராசன் நளனையும் தமயந்தியையும் தேடி, அவர்கள் இருக்குமிடம் முதலியவற்றை அறிந்துவரும்படி ஒரு வேதியனை அனுப்பினான். அவன் பலவிடங்களிலுந் தேடி ஈற்றில் சேதி நாட்டை அடைந்தான். அந்நகரில் கூந்தல் சடையாகி, வெண் துகிலும் பாதியாய், துயரமே உருவெடுத்தாற்போன்று நின்ற தமயந்தியைக் கண்டு அவளை அடையாளங்கண்டு, மனம் வருந்தி அழுதான். அவளும் அவ்வடி வீழ்ந்து அழுதாள். மறையவன் சேதி யரசன்

தேவியை நோக்கி, "நின் மகள் பட்ட துயரைக் கண்டாயோ?" என்று வினவினன். அப்பொழுதுதான் தன்னிடம் வாழ்ந்து வந்தவள் தன் சகோதரி மகள் என்பதை அறிந்து, மனந்தடுமாறித் திகைப்புற்று, அன்னவள்மீது வீழ்ந்தழுதாள். பின்பு ஒருவாறு துயரம் நீங்கி, மகனையும் மகளையுங் கண்டாவது ஓரளவு ஆறுதலடையட்டும் என்று எண்ணித் தமயந்தியை விதர்ப்ப நாட்டிற்கு அனுப்பினள்.

திருப்பி வந்த தம் அரசன் மகளைக்கண்ட நகர மக்கள் எல்லையில்லாத் துயரமெய்தினர். பெற்ற தாயும் தந்தையும் மகள் நிலைமையைக் கண்டு ஆற்ருது பலவாறு வருந்தினர். அன்புமிக்க உறவினர் கண்ணீர்க் கடலில் நீந்தினர். நிகழ்ந்தவற்றையெல்லாம் கூறக் கேட்ட தாய் தமயந்தியை நோக்கி, "பனியிருளில் பாழ் மண்டபத்திலே உன்னை நினையாது நீத்துச் சென்ற பொழுது, தனியே இருந்து என்னவெல்லாம் எண்ணி வருந்தினய்? உதவியற்ற அந்நிலையில் என்ன செய்தாய்? உன் மனம் என்னபாடு பட்டதோ?" என்று ஆராமை மீதூரப் புலம்பினள்.

14. நளனது உருமாற்றம்.

கலிபுருடன் செய்த வஞ்சனையினல் நள்ளிரவில் மனைவியைப் பிரிந்த துயரத்தோடு நளன் சென்றன். மக்கள் நடமாட்டம் இல்லாத அக்கொடிய கானகத்தில் நெருப்பின் வாய்ப்பட்டு எரியும் பாம்பரசன் மனம் பதைத்து, "மன்னவனே! உனக்கு அபயம்" என்று ஓலமிட்டான். அரசன் அச்சொல் வந்த திசைநோக்கிச் சென்று எரிகின்றவனைக் கண்டு, தீக்கடவுள் தந்த

வரத்தினால் அரவரசன் இருக்குமிடத்தை அடைந்தான். அடைதலும் அழலோன் அஞ்சி உடைய, நளன் உள்ளே புகுந்தான். அப்பொழுது நாக வேந்தன், "ஒரு முனிவன் இட்ட சாபத்தினால் இக் காட்டில் நெருப்பின் வாய்ப்பட்டு அழிகின்றேன்; அன்பினால் நீ என்னை எடுத்தால் இத் துன்பம் நீங்கப் பெறுவேன்; ஆதலால் வந்தெடுத்து, என்னை நல்ல நிலத்தில் விடுவாயாக" என்றான்.

என்று கூறிய அளவில் நளன் அப் பாம்பினைத் தூக்கிக்கொண்டு நடந்தான். நிலத்தில் வைக்குஞ் சமயம் அந் நாக வேந்தன் நளனை நோக்கி, "மண்ணின் மீது உனது காலால் ஒன்று முதல் எண்ணி, பத்தாமடி அளந்து 'தச' என்று சொல்லி, என்னைக் கீழே விடுவாயாக" என்று வேண்டினான். மன்னவனும் அங்ஙனமே செய்ய, அவனது ஏவல் பெற்றே அன்னவனுக்குத் தீங்கிழைக்க விரும்பிய அரவரசன், 'தச' என்று சொல்லியவுடன் அவனைத் தன் பற்களால் தீண்டினான். தீண்டுதலும் வாய்மை வேந்தனது பேரழகினையுடைய திருமேனி வெந்து குறுகிற்று.

அப்பொழுது அவன், "ஆற்றல் மிக்க அரவரசனே! சீற்றம் ஒரு சிறிதும் இல்லாதிருக்கவும் என் உருவத்தை நச்சுப் பற்களால் மாற்றுதற்குக் காரணம் யாது?" என்று வினவினான். அதற்குப் பாம்புகளின் தலைவன் "வேந்தனே! என் பெயர் கார்க்கோடகன்; நீ இங்கு வந்ததை யான் எண்ணி, உரு மாறி மறைந்துறையும் பொருட்டு இங்ஙனஞ் செய்தேன். இந்தக் காட்டிலே தணியாத வெங்கனலை என் பொருட்டுத் தாங்கினாய். இந்த அழகிய ஆடைகளைக் கொள்வாயாக. இவற்றை

நீ அணிந்தால், மறைந்துறையும் உருவமும் காலமும் நீங்க, பழைய வடிவத்தைப் பெறுவாய். மேலும் வாகு குறைந்தமையால் வாகுகன் என்னும் பெயர் பூண்டு அயோத்தி மன்னவனுக்குத் தேர்ப்பாகன் ஆவாயாக" என்று சொல்லி விடை பெற்றேகினன்.

தனக்கு யாரும் ஒப்பில்லாத அரவரசன் செய்த உதவி துணையாகப் பெரிய காட்டினூடு நளன் செல்லலானன். தன் காதலியை நடுக் காட்டிலே உதவியற்ற நிலையில் கைவிட்டு வந்த துயரம் பழைய நினைவுகளால் மேன்மேலும் விஞ்சி மனதை வாட்டிற்று. இங்ஙனம் செல்பவன் கடற்கரையை அடைந்தான். அவ்விடத்தில் அவன் கண்ட ஒவ்வொரு காட்சியும் அவனது ஆருத் துயரத்தை அதிகப்படுத்திற்று. மரக் கொம்பிலுள்ள குருகு, புன்னையிலுள்ள வண்டுகள், கரைமருங்கில் ஓடுகின்ற நண்டுகள் முதலியவற்றை நோக்கி, மனைவியைப் பிரிந்த துன்ப மிகுதியினல் ஆற்ருது பலப்பல கூறலுற்ருன். அழுவது போன்று ஆரவாரஞ் செய்து, அலைகள் புரண்டு விழுகின்ற கடலை நோக்கி வினவலுற்ருன்:— "ஏ கடலே! நீயும் போவதும் வருவதுமாகி நாவாய் குழறி நடுங்குகின்ருய்; என்னைப் போலவே மனைவியை இராக்காலத்திலே கைவிட்டு வந்தனையோ?"

"போவாய் வருவாய் புரண்டு விழுந்திரங்கி
நாவாய் குழற நடுங்குறுவாய்—தீவாய்
அரவகற்றும் என்போல ஆர்கலியே மாதை
இரவகற்றி வந்தாய்கொல் இன்று." 21

பின்பு வழிநடந்து அயோத்தி நகரை அடைந்தான். வாகுகன் என்னும் பெயர் பூண்டு சென்ற நளன் தான் தேர்த் தொழிலிலும் மடைத் தொழிலிலும் வல்லவன் என்று தன் வரவினை அந்நாட்டரசனுக்கு உணர்த்தும்படி

சொன்னான். இருதுபன்னன் அவனை வரவழைத்து உசாவி யறிந்து; தேர்ப்பாகனாகத் தன்னிடம் வைத்துக் கொண்டான்.

15. கலி நீங்கியமை.

விதர்ப்ப நாட்டை அடைந்த தமயந்தி ஒரு புரோகிதனை நோக்கி, "நீ பலவிடங்களிலுஞ் சென்று, 'கரிய இருளிலே பாழடைந்த மண்டபத்திலே காதலியை அயர்ந்த நித்திரையில் கைவிட்டுப்போதல் அரசரானவர்க்குத் தகுமோ?' என்று கூறுவாய்; இதற்கு எதிர்மாற்றம் யாரேனும் உரைத்தால் அவரைப் பற்றிய விவரமெல்லாம் அறிந்து விரைந்து வருக" என்று சொல்லி அனுப்பினாள். அந்த வேதியனும் பல நாடுகளிலும் நாடி, முடிவில் அயோத்தி நகரை அடைந்தான். அடைந்தவன், "கானகத்துக் காரிருளில் காதலியைக் கைவிட்டுப் போனதும் வேந்தர்க்குப் போதுமோ?" என்று சாற்றினான். அதனைச் செவியேற்ற நளன் உடனே அவ் அந்தணன் எதிரே வந்து கூறுவான்:— "மனைவியை நல்ல உறக்கத்திலே விட்டுப் பிரிந்த செயல் பழைய விதியினால் விளைந்ததாகும். உலகம் முழுவதையும் பாதுகாக்கும் வெண்குடைவேந்தன் ஒரு பெண்பாலை, அதுவும் திருமகளை ஒத்த தன் மனைவியைக் கொடிய காட்டிலே கைவிட்டுச் செல்வானோ? ஒருபொழுதும் இல்லை. அவன் வேண்டுமென்று, அன்பின்மையால் அப்படிச் செய்தான் என்று நீ ஐயுற வேண்டாம்."

"ஒண்டொடி தன்னை உறக்கத்தே நீத்ததுவும்
பண்டை விதியின் பயனேகாண்—தண்டரளப்
பூத்தர்ம வெண்குடையான் பொன்மகளை வெவ்வனத்தே
நீத்தானென்று ஐயுறேல் நீ." 22

இவ்வாறு எதிர்மாற்றங் கூறியதைக் கேட்ட புரோகிதன் குண்டினபுரத்தை அடைந்தான். நளனையே நினைந்து கண்ணீர் சிந்தியபடியிருந்த தமயந்தி மிகுந்த ஆர்வத்தோடு, "எங்கெங்கேயெல்லாம் சென்று தேடிளுய்? கங்கைவள நாடுடைய மன்னவனைக் கண்டனையோ? கூறுவாயாக" என்று அவனைக் கேட்டாள். அவன் தான் அயோத்தி சென்ற விவரமெல்லாங் கூறி, "வாக்கினுல் நம் மன்னவனை ஒப்பான்; ஆனுல் ஆக்கையை நோக்கின் அவனல்லன் எனக்கு எதிர்மாற்றந் தந்த அத்தேர்ப்பாகன்" என்று விடையளித்தான்.

பின்பு தமயந்தி அந்த வேதியனை நோக்கி, "நீ அந்த அயோத்தி நகரஞ் சென்று, 'வீமன் மகள் மீண்டும் ஒரு சுயம்வரம் பூண்டாள்' என்று சொன்னுல் அந்நாட்டரசனுக்கு நம் படை வேந்தன் தேர்கொண்டு இவ்விடம் வருவான்" என்று ஆர்வத்தோடு கூறினுள். அந்த அந்தணனும் அங்ஙனமே சென்று இருதுபன்ன மன்னனை யடைந்து, "எங்கள் அரசன் விதர்ப்பன் மகள் மீண்டும் ஒரு சுயம்வரத்தை விரும்பினுள்; அஃது நாளை நடைபெறும்" என்று கூறிச் சென்றுன்.

கேட்ட அயோத்தி வேந்தன் தன் தேர்ப்பாகனுயிருந்த நளனை நோக்கி, "வந்த வேதியன் 'வீமன் காதலி மற்ருெரு சுயம்வரத்தைக் காதலித்தாள்' என்று ஓதினுன். இதற்கு என் செய்யலாம்?" என்று வினவினுன். அதற்கு நளன், "குறையாத கற்பினளாகிய வீமன் மகள் வரம்பு கடவாத பண்பினையுடையவள். ஆதலால் இச்சொல்லை ஆராய்ந்து கொள்ளவேண்டும்" என்ருன். இருதுபன்னன், "முன்பு அவள் என்மேல் எறிகின்ற மாலை நளன் முன்னே போய் விழுந்தது; அதுதான்

இதன் காரணம்" என்று கூறினான். அதுகேட்ட நளன், "முன் செய்த வினையினால் உண்மையாகவே இப்படி நேர்ந்ததோ? அன்றி ஏந்திழையாள் என்னைக் காண்பதற்குச் செய்த உபாயமோ? எவ்வாறாயினும் தன் மரபிற்கு ஒவ்வாத சொல் உலகிலே உரைபட்டது எவ்வாறு ஆயிற்றோ" என்று தன்னுள்ளே சிந்தித்துப் பின்பு 'எவ்வாறாயினும் காவலனுக்கு ஏவற் கடன் பூண்ட யான், அவன் ஏவியது முடிப்பேன் இனி' என்று துணிந்து, குதிரைகளைச் சிறந்ததொரு தேரிற் பூட்டிக் கொண்டு, அரசன் முன்பு நிறுத்தினான். நிறுத்தி, "சூரியனது ஒற்றை ஆழிபூண்ட தேர்போன்று அதி விரைவாக ஓடும் தேர் கொண்டுவந்தேன்; இதில் ஏறுக" என்றுரைத்தான்.

ஏறியபின் தமயந்தியின் செயலை ஆராய்கின்ற நளன் செலுத்திய தேர் மையல்நோய் கொண்ட இருதுப்ன்னன் சிந்தையினும் விரைவாகச் சென்றது. செல்லும் பொழுது, "மேலாடை வீழ்ந்தது; எடு" என்றான் அரசன். அதற்கிடையில் தேரும் நாலாறு காதம் கடந்து விட்டது. அதனை அறிந்த இருதுபன்னன், "இதோ காணும் தான்றி மரத்தின் அடிக்கிளையிலுள்ள காய்கள் பத்தாயிரங்கோடி; எண்ணிப்பார்" என்று கூற, நளனும் தேரை நிறுத்தி, எண்ணி, அது சரி என்று கண்டான். பின்பு அயோத்தியரசன் விரும்பியபடி இருவரும் தத்தம் வித்தையை மாற்றிக்கொண்டனர். கணித வித்தையை நளன் கற்றுக்கொண்டு குதிரைகளின் இதயமறிந்து தேர் செலுத்தும் வித்தையை மற்றவனுக்குக் கற்பித்தான். அக்கணமே கலி நளனை விட்டு நீங்கினான்.

பின்பு இருதுபன்னன் வீமனது தலைநகரை அடைந்து, அரண்மனை முற்றத்தில் தனது தேரை

நிறுத்தி, உள்ளே புக்கு, தன் வரவைச் சொல்லியனுப்பினன். வந்த வீமராசன் அம்மன்னவனை நோக்கிக் கூறுவான்:—“தாமரை மலரிலுள்ள புதிய தேனையுண்டு துயின்ற வண்டு நெய்தற்பூவினையும் விரும்புகின்ற பெரிய நாட்டரசனே! நீ என்னிடம் வர அவாக் கொண்ட காரணம் யாது?”

“கன்னி நறுந்தேறன் மாந்திக் கமலத்தின்
மன்னித் துயின்ற வரிவண்டு—பின்னையும்போய்
நெய்தற் கவாவும் நெடுநாட நீஎன்பால்
எய்தற் கவாவியவா றென்.” 23.

இவ்வாறு அவன் கேட்டதும் தான் ஆராயாமல் வந்த பிழையை உணர்ந்த இருதுபன்னன், தன் ஏமாற்றத்தைக் காட்டிக் கொள்ளாமல், “ஏதோ இன்றைய தினம் உன்னைக் காணவேண்டும் என்னும் ஆசையினல் வந்தடைந்தேன்” என்று விடை கூறினன்.

“இன்றுன்னைக் காண்பதோர் ஆதரவால் யானிங்ஙன்
மன்றன் மலர்த்தாராய் வந்தடைந்தேன்”—என்றான்
ஒளியார்வேற் கண்ணாள்மேல் உள்ளந் துரப்பத்
தெளியாது முன்போந்த சேய். 24.

16. நளன் மக்களைக் காணுதல்.

குண்டினபுரத்தை அடைந்த நளன் குதிரைகளை அவிழ்த்துவிட்டு, ஆற்றி, அடிசிற்குறை முடிக்கும் பொருட்டு மடைப்பள்ளி புக்கான். அவன் புக்கமனை ஒருவர் நிரப்பாமல் எல்லாம் நிரம்பிற்று.

நிற்க: அயோத்திவேந்தன் தேர்ப்பாகனக வந்தவன் நளனே என்று தமயந்தி ஐயுற்று, அவன் மண்டத்

தொழில் செய்கின்றவாற்றை யெல்லாம் தெரிந்து வரும்படி தன் பணிப்பெண்களை அனுப்பினாள். அவர்களோடு தன் மகனையும் மகளையும் அனுப்பி, ஒருத்தியை நோக்கி, "நீ இவர்களை அவ்வரசன் அருகில் விளையாட விட்டு அவனது மேற்செயலை ஆராய்ந்து வருவாயாக" என்று பணித்தாள்.

தன் மக்களை முன்னே கண்ட நளன் மனம் நடுங்கிப் பெருமூச்சுவிட்டு, ஆர்வ மிகுதியினால் புகுந்தெடுத்து, தன் தோளில் அணைத்து, "மக்களே! நீங்கள் என்னுடைய மக்களைப் போல்கின்றீர்கள்; யாருடைய மக்கள்?" என்று கேட்டான். அவர்கள், "நாங்கள் நிடத நாட்டு மன்னவன் மக்கள்; அன்னையை அவன் காட்டிலே விட்டுச் சென்றபடியால் இந்நகரில் வாழ்கின்றோம். எங்கள் வளநாட்டை மற்றொருவன் ஆள்கின்றான்" என்று அழுதுகொண்டு கூறினர்,

"மன்னன் நிடதத்தார் வாழ்வேந்தன் மக்கள்யாம்
அன்னைதனைக் கான்விட் டவனேக — இந்நகர்க்கே
வாழ்கின்றோம் எங்கள் வளநாடு மற்றொருவன்
ஆள்கின்றான்" என்றார் அழுது. 25.

இங்ஙனம் அவர்கள் சொன்ன சொற்கேட்ட அரசன் நெஞ்சழிந்து துயர மிகுதியினால் போகா உயிரோடு கண்ணீர் உகுத்து நின்றான். பின்பு தன் மகனைக் கையில் எடுத்து, "அரசிளங் குமரனே! உங்களுக்குரிய நாட்டை ஒருவன் ஆளும்படி விட்டு ஓடிவந்து இங்கு உறைதல் இழுக்கன்றோ?" என்று கேட்டான். அது கேட்டுக் கடுங்கோபங் கொண்ட இளவரசன் கூறுவான்:— "நெஞ்சினால் நினைந்து இது போன்ற தகாத சொற்களை மடைத் தொழில் புரியும் அறிவிலியாகிய உன்னையன்றி யாராவது கூறுவரோ?

அரசர்கள் அஞ்சாது இதனைத் துணிந்து கூறுவரோ? சிறு தொழில் புரியுந் தீயோனே! எங்கள் அரசனுக்கு வாய்மையே வலிமையாகும். எந்தையின் பாதங்களில் எல்லாப் பகுதிகளிலும் உலகிலுள்ள பேரரசர் முடி சாய்த்து வணங்கியதனுல் உண்டாகிய தழும்புகளை இன்றுங் காணலாம்.''

இங்ஙனங் கூறக் கேட்ட நளன் மனங்கனிந்துருகிக் கண்ணீர் பெருக, "மன்னவர் பெருமையை மடையர் அறிவரோ? உன்னை அறியாமற் சொன்னவற்றைப் பொறுத்துக் கொள்வாயாக'' என்று சொல்லி முடி சாய்த்து நின்ருன்.

17 கலி வரமளித்தல்.

நளன் மக்களைக் கண்டு உரைத்த வாசகத்தை யெல்லாம் ஏவலாளர் ஒன்று விடாமற் கூறினர். அவற்றைக் கேட்டதும் கேளாததும் தமயந்தி ஐயந் தெளிந்து, மனமழிந்து, கொடையில் மேம்பட்ட நளன் மடைத் தொழில் செய்யநேரிட்ட நிலைமையை எண்ணிப் பதைபதைத்து, அழுது வீழ்ந்தாள். பின்பு தன் தந்தை யிடஞ் சென்று, "இந்நகரை யடைந்துள்ள அரசனுக்குத் தேர் செலுத்தி வந்து, மடைத் தொழிலுஞ் செய்கின்ற மன்னவனே எங்கள் கோமான்'' என்று எடுத்துரைத்தாள். வீமராசன் அரசர் புடைசூழச் சென்று தன் காதலியின் காதலனைக் கண்ணுற்ருன். அன்னவன் உருவம் மாறியிருந்தமையால் அடையாளங் காண இயலாது திகைத்து நின்ருன். எல்லாப் படியாலும் ஆராய்ந்து அவனது நுண்ணிய பேச்சு நலத்தினுல் அவனே நளன் என்று துணிந்து அவனை நோக்கிக் கூறுவானுயினன்:-"அழகிய கமுகம் பாளையைப் பச்சைப்

பாம்பின் படமென்று, பெண் குரங்கு ஐயமுற்றுத் தெளியாதிருக்கும் நீர்வளம் மிக்க நாடனே! உனது உண்மையான உருவத்தை ஒளியாது காட்டுவாயாக."

"பைந்தலைய நாக பணமென்று பூகத்தின்
ஐந்தலையின் பாளைதனை ஐயுற்று—மந்தி
தெளியா திருக்குந் திருநாடா உன்னை
ஒளியாது காட்டுன் உரு." 26.

நளன் அரவரசன் முன்பு அளித்த அழகிய துகில்களுள் ஒன்றை எடுத்து உடுத்தினன்: மற்றதைப் போர்த்தான். மறைந்துறைதற்கு உதவியாய் இருந்த தேர்ப்பாக வேடம் உடனே நீங்கிற்று. பழைய உண்மை வடிவத்தோடு முன்னே நின்ற தந்தையைக் கண்ட அரசிளங் குமரன் தங்கையோடும் அவனடிகளில் விழுந்து வணங்கி, கட்டித் தழுவி, ஆனந்தக் கண்ணீர் விட்டான். காட்டிலே தன்னை விட்டுப் பிரிந்த நிலையில் பாதித் துகிலோடு நின்ற தமயந்தியும் அவனடிகளில் வீழ்ந்தாள்; அவள் கண்களில் நீர் ததும்பிற்று. அலர்ந்த கண்ணீர் மறைத்தபடியால் அவள் தன் நாயகனைக் காண இயலாதவளாயினள்.

பின்பு தேவர்கள், "உத்தமர்களுள் இவனை ஒப்பாரில்ல உலகில் ஒருவரும் இல்லை" என்று கூறித் தார் வேந்தன்மேல் பூமாரி பெய்தனர். எல்லாத் துன்பங்களுக்கும் மூல காரணமாகிய கலி புருடனும் அன்பு நெறியால் அரசாளும் நளன் முன்னே வெளிப்பட்டு நின்று, அவனது செங்கோல் அரசினையும், தமயந்தியின் அருங் கற்பினையும் பாராட்டி, மன்னவனை நோக்கி, "உனக்கு வேண்டும் வரம் கேட்டுக்கொள்வாயாக" என்றுரைத்தான். அவ்வரசன், "உனது காலம் செல்லு

மளவும் என் கதையை விரும்பிக் கேட்டவர்களை நீ அடையாதே'' என்றுரைத்தான். கலியும் அதற்கு இசைந்து, ''என் காலத்து உன் சரிதங் கேட்டாரை யான் அடையேன்,'' என்று வரமளித்து, விடை கொண்டான்.

பின்பு நளனையும் தமயந்தியையும் மக்களையும் உடனழைத்துக்கொண்டு சென்று விதர்ப்பராசன் விருந்து செய்தான்.

இருது பன்னனும் தான் முன்பு அறியாது கூறியவற்றைப் பொறுக்கும்படி நளனை வேண்டி, விடை பெற்றுத் தன்னுடைய தேரேறிச் சென்றான்.

18. நகரடைதல்.

பின்பு நளன் தன் தேவியோடும் மக்களோடும் பொன்னாலாகிய அழகிய தேரேறி, சேனை முன்னே செல்ல, வேல்வேந்தர் பின்னே வர, தன் நாடு நோக்கிப் புறப்பட்டான். வழியிலுள்ள ஆறு, மலை முதலியவற்றைக் கடந்து சூரியன் உதிக்கும் சமயம் மாவிந்த நகரைச் சூழ்ந்த அழகியதொரு சோலையை எய்தினான்.

தன் மணித்தேரினின்றும் இறங்கிய பின் புட்கரனுக்குத் தூதனுப்பினான். ''அவனுக்கு என் வரவு சொல்லி, 'மறு சூதுக்கு உற்ற பணையம் உளது' என்றுரைத்து, அவனை உடன் கொணர்க'' என்று சொல்லி விட்டான். மாயச் சூதினால் நாடு கவர்ந்த கள்ள மனத்தவனாகிய புட்கரனும் வந்து, நறிய மலர்ச்சோலையிலே தமயந்தியோடும் இருந்த நளனைக் கண்டான். நிலைமையை உணராத அவ் வெங்கோல் வேந்தன் செங்கோல்

அரசனைச் சேமம் விசாரித்தான். முன்பு கலிபுருடன் செய்ததை உணராது, "யாது பணயம்?" என்று கேட்டான். திருமாலை ஒத்த நளன் தன் கையாழியைக் கழற்றி வைத்தான். மறு சூதாட்டம் ஆரம்பமாயிற்று. அப்பலகை ஒன்றிலேயே அருகிலுள்ளார் யாவரும் மதிக்கும்படி செப்பரிய பெருஞ்செல்வம் மிக்க திருநகரை, ஒப்பரிய சேனையோடு வளநாட்டையும் முன்பு வஞ்சனையால் கவர்ந்தானை இப்பொழுது நளன் வென்றான். எல்லாவற்றையும் தோற்ற புட்கரன் வந்தபடியே வழிக்கொண்டான்.

பின்பு ஏனைய அரசர் யாவரும் வாழ்த்துக்கூற, சேனை இருமருங்கும் நெருங்கிவர, நளன் தேரேறிப் பொன்னகரம் எய்தும் இந்திரனைப் போன்று தனது நன்னகரம் சென்றடைந்தான். தன் தேவியோடு மீண்டும் முன்போல் ஆட்சிபுரிய நளன் வருகின்றான் என்றறிந்த நகரமாந்தர் அகமும் முகமும் மலர்ந்து, பெருமகிழ்ச்சியால் உடல்பூரித்தனர். அவர்கள் அப்பொழுது அளவு மிக்க ஆனந்தம் அடைந்தனர்.

கார்பெற்ற தோகையோ கண்பெற்ற வாண்முகமோ
நீர்பெற் றுயர்ந்த நிறைபுலமோ--பார்பெற்று
மாதோடு மன்னன் வரக்கண்ட மாநகருக்கு
ஏதோ உரைப்பன் எதிர். 27.

முற்றும்.

———

செய்யுள் பொருள் விளக்கம்.

பக்கம் 4.

1. சீதமதிக்குடைக்கீழ்ச் செம்மை அறங்கிடப்பத்
தாதவிழ் பூந்தாரான் தனிக்காத்தான்—மாதர்
அருகூட்டும் பைங்கிளியும் ஆடற் பருந்தும்
ஒருகூட்டில் வாழ உலகு.

இச் செய்யுள் நளனது ஆட்சியின் தனிச் சிறப்பைப் பற்றிக் கூறுகின்றது.

சீதம் மதிக் குடைக்கீழ் - குளிர்ச்சி மிக்க சந்திரனைப் போன்ற வெண்குடை நிழலில்; செம்மை அறம் கிடப்ப - தன்னலங் கருதாது செய்யப்படும் தான தருமம் எல்லாம் நன்கு நிலைபெற; தாது அவிழ் பூந்தாரான்-தேன் சொட்டுகின்ற பூமாலையை அணிந்த (நளன் என்னும்) அரசன்; தனிக்காத்தான் - ஒப்பற்றதொரு சீரிய முறையில் பாதுகாத்தான்.

(எங்ஙனமெனில்:—) மாதர் அருகு ஊட்டும் பைங்கிளியும் - பெண்கள் அருகிலிருந்துகொண்டு உபசரித்து ஊட்டுகின்ற பசிய நிறமுள்ள அழகிய (சாதுவான) கிளியும்; ஆடல் பருந்தும் - கொலைத் தொழிலையுடைய பருந்தும்; ஒரு கூட்டில் வாழ - ஒரே கூட்டில் பகைமை ஒழிந்து வாழும்படி (காத்தான்).

(எதனையெனில்:—) உலகு - நிடத நாட்டை.

நளன் கிளியும் பருந்தும் ஒரு கூட்டில் வாழும்படி நிடத நாட்டை ஒப்பற்றதொரு முறையில் ஆட்சி செய்தான்.

வெண்குடை மன்னர் ஆட்சியைக் குறிக்கும். நளனது சீரிய ஆட்சியில் மேலான அறங்கள் நிலையாக நடைபெற்றன; மக்கள் யாவரும் பகைமை என்பதின்றி ஒரு குலத்தவரைப் போன்று அன்பு கெழுமி வாழ்ந்து வந்தனர் என்பது கருத்து.

தாது - தேன். அவிழ்தல் - சொட்டுதல். உலகு - நிடத நாடு; ஓர் அரசனது நாட்டை உலகம் என்று கூறுவது மரபு.

பக்கம் 5.

2. " அஞ்சல் மடவனமே உன்தன் அணிநடையும்
வஞ்சி யனையார் மணிநடையும்—விஞ்சியது
காணப் பிடித்ததுகாண் " என்றான் களிவண்டு
மாணப் பிடித்ததார் மன்.

"அஞ்சல் - பயப்படாதே; மட அ(ன்)னமே - இளமையாகிய (அழகிய) அன்னமே! உன் அணி நடையும் - உனது இயல்பா யமைந்த அழகிய நடையும்; வஞ்சி அனையார் மணி நடையும், - வஞ்சிக் கொடி போன்ற பெண்களது சிறந்த நடையும்; (ஆகியவற்றுள்), விஞ்சியது காணப்பிடித்தது - எது கூடிய அழகுடையது என்பதை நேரே காணும் பொருட்டுப் பிடித்தது (ஆகும்); காண் - இதனை நீ தெளிவாய்; என்றான் - என்று சொன்னான்.

(யார் எனின்:—) களி வண்டு மாணப் பிடித்த தார் மன் - தேனை யுண்டு களிப்பு மிக்க வண்டுகள் மிகுதியாகப் பற்றிப் பிடித்த மாலையை அணிந்த அரசன்.

அரசன், "அன்னமே! அஞ்சாதே; இரு நடையிலும் விஞ்சியது காணப் பிடித்த தன்றி வேறில்லை" என்றான்.

அன்னத்தின் அச்சத்தினை விரைவிலே தணிக்க ஆர்வங் கொண்ட அரசன் முதலில், "அஞ்சல்" என்று

கூறிப் பின்பு, "மட அன்னமே!" என்று அன்பு தோன்றும் படி விளித்தான். அரசனது அனுதாபம் நிறைந்த மன நிலையினால் சொற்கள் பின் முன்னாக வரிசை மாறி வந்தன.

"களி வண்டு" முதலிய அடை மொழிகள் அரசனது உபகார சீலத்தைக் குறிக்கும். அரசனது இனிய சொற் கேட்ட அன்னம் அவனை மற்றொரு முறை நிமிர்ந்து பார்த் திருக்கும். அந்நிலையில் அன்னம் கண்ணுற்றபடி அரசனது தோற்றம் வருணிக்கப்படுகின்றது. தனது மாலையிலுள்ள தேனை வண்டுகள் குடைந்துண்ணும்படி கொடுப்பவனது உதார குணத்தை நேரே கண்ட அன்னம் தன் மனத் தடுமாற்றம் நீங்கப் பெற்றது என்பது உய்த்துணரத் தக்கது.

களி - மகிழ்ச்சி. மாண - மிகுதியாக: "நிலையில் திரி யாது அடங்கியான் தோற்றம், மலையினும் மாணப்பெரிது" என்பதை நோக்குக. பிடித்த - இறுகப் பற்றிய. மன் - அரசன். தன்-அசை.

பக்கம் 6.

3. " நாற்குணமும் நாற்படையா ஐம்புலனும்
நல்லமைச்சா
ஆர்க்குஞ் சிலம்பே அணிமுரசா—வேற்படையும்
வாளுமே கண்ணா வதன மதிக்குடைக்கீழ்
ஆளுமே பெண்மை அரசு."

தமயந்திபால் அமைந்த எல்லா நலங்களையும் கூறுவது இச் செய்யுள்.

நாற் குணமும் நாற் படையா(க) - பெண்களுக்கு இயல்பா யமைந்த நாணம் முதலிய நான்கு குண நலங் களும் அரசர்க்கு உரிய யானை முதலிய நான்கு படைகளா கவும்; ஐம் புலனும் நல் அமைச்சா(க) - ஐந்து பொறிகளும்

நன்னெறியிற் செலுத்தும் அமைச்சர்களாகவும்; ஆர்க்கும் சிலம்பே அணி முரசா(க) - ஒலிக்கின்ற சிலம்புகளே அழகிய முரசங்களாகவும்; கண்ணே வேற்படையும் வாளும் ஆ(க) - கண்கள் இரண்டும் வேல், வாள் என்னும் படைக்கலங்களாகவும்; மதி வதனக் குடைக் கீழ் - மதி போலும் முகமாகிய வெண்குடை நிழலின் கீழ் (வீற்றிருந்து); பெண்மை அரசு ஆளும் - பெண் தன்மையாகிய அரசினை ஆட்சி செய்வாள். (அவள்).

ஓர் அரசன் தனக்குரிய நாட்டை, படை முதலிய வற்றின் உதவியினால் ஆட்சி புரிவது போன்று பெண்மை என்னும் நாட்டை, தமயந்தி ஆண்டுவந்தாள். அவள் பெண்களுக்குரிய அழகு, அறிவு, நிறை முதலிய குணங்கள் ஆகிய எல்லா நலமும் பத்தும் பத்தாகப் பெற்று விளங்கினாள் என்பது கருத்து.

நாற்குணமாவன:—நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்பன. நாற்படையாவன:— யானை, தேர், குதிரை, காலாள் என்பன. ஐம்புலன்:— மெய், வாய், கண், மூக்கு, செவி என்பன.

நாற்படையாக என்னும் சொல் நாற்படையா என்று ஈறு குறைந்தது. அமைச்சாக, முரசாக, கண்ணாக என்பனவும் அங்ஙனமே ஈறு குறைந்தன. கண் வேற்படையும் வாளும் ஆக என்று மாற்றிப் பொருள் கொள்க.

பக்கம் 7.

4. " செம்மனத்தான் தண்ணளியான் செங்கோலான்
மங்கையர்கள்
தம்மனத்தை வாங்குந் தடந்தோளான்—மெய்ம்மை
நளனென்பான் மேனிலத்தும் நானிலத்தும் மிக்கான்
உளனென்பால் வேந்தன் உனக்கு.

இதுவும் அடுத்த செய்யுளும் நளனது நன்னலப் பண்புகளைக் கூறுவன.

செம்மனத்தான் - இயல்பாகவே செவ்விய நெறிப்பட்ட மனத்தையுடையவன்; தண் அளியான் - யாவர் மாட்டும் இனிய அருளை யுடையவன்; செங்கோலான் - அருளுடையவனாயினும் அரசர்க்குரிய நீதி தவறாதவன்; மங்கையர்கள் தம் மனத்தை வாங்கும் தடந்தோளான் - பெண்களது மனத்தை இழுக்கும்படியான விசால்மான (அழகிய) தோளையுடையவன்.

(இப்படி குணமும் அழகும் ஒருங்கு நன்கு அமையப் பெற்றவன் யாவன் எனின்:—) மெய்ம்மை நளன் என்பான் - வாய்மை நெறி ஒரு சிறிதும் தவறாமையால், அவன் பெயர் கூறுமிடத்து 'நளன்' என்று கூறாது, 'மெய்ம்மை நளன்' என்று சிறப்பித்துப் போற்றப் பெற்றவன்; மேல் நிலத்தும் நால் நிலத்தும் மிக்கான் - தேவர் உலகிலும் பூவுலகிலும் யாவரினும் மேம்பட்டவன்; என்பால் உளன் - என் வசம் இருக்கின்றான்; வேந்தன் உனக்கு - அவனே உனக்கு ஏற்ற தலைவன்.

வாங்கும் - வசப்படுத்தும். மெய்ம்மை நளன் என்பான் - குடிப்பெயர் போன்று 'மெய்ம்மை' என்னும் அடைமொழியோடு பெயர் கூறப்படுபவன். நானிலம் - நான்காகிய நிலம்; பூவுலகம்.

பக்கம் 7.

5. "அறங்கிடந்த நெஞ்சும் அருளொழுகு கண்ணும்
மறங்கிடந்த திண்டோள் வலியும்—திறங்கிடந்த
செங்கண்மால் அல்லனேல் தேர்வேந்தர் ஒப்பரோ
அங்கண்மா ஞாலத் தவற்கு."

திருமாலையல்லாது அவனுக்கு ஒப்பாகச் சொல்லத் தக்கவர் ஒருவரும் இலர் என்று கூறுகின்றது இச் செய்யுள்.

அறம் கிடந்த நெஞ்சும்-உலகைப் பாதுகாத்தலாகிய அறம் பற்றிய சிந்தனை நீங்காத நெஞ்சமும்; அருள் ஒழுகு கண்ணும்-அந் நெஞ்சினின்றும் பெருகிய அருள் வெள்ளம் ஒழுகுவது போன்ற கண்ணும்; மறம் கிடந்த திண்தோள் வலியும் - பாதுகாத்தற்கு வேண்டும் அளவிற்குப் பெரிதும் விஞ்சிய வீரம் மிகுந்த திண்ணிய தோள் வலிமையும்; திறம் கிடந்த - (ஆகிய) இப் பண்புகளெல்லாம் அமையுந் திறத்தால் நன்கு நிலைபெற்ற; செங்கண்மால் அல்லனேல் - சிவந்த (அழகிய) கண்ணையுடைய திருமாலையன்றி; அவற்கு-நளன் என்னும் அவ்வரசனுக்கு; அம் கண் மா ஞாலத்து தேர்வேந்தர் ஒப்பரோ-அழகிய இடமகன்ற பெரிய உலகம் முழுவதிலுமுள்ள தேர்ப்படையினை யுடைய அரசர் ஒப்பு ஆவார்களோ? ஆகமாட்டார்.

......நெஞ்சும்......கண்ணும்......தோள் வலியும் ஆகிய திறங்கிடந்த செங்கண்மாலே அப்பண்புகளையுடைய அவனுக்கு ஒப்பாகக்கூடும்; அவனை விட்டால் அப்பண்புகளில்லாமல் தேர்ப்படை முதலிய அரச சின்னங்களை மட்டும் உடைய அரசர் ஒருவரும் ஒப்பாகார். உலகம் முழுவதும் தேடினும் அவனுக்கு (ஓரளவிலேனும்) ஒப்பாகும் அரசன் ஒருவனையும் காணுதல் அரிது என்பது தோன்ற 'அங்கண்மாஞாலம்' என்று கூறப்பட்டது.

பக்கம் 12.

6. விண்ணரச ரெல்லாரும் வெள்கி மனஞ்சுளிப்பக்
கண்ணகன் ஞாலங் களிகூர—மண்ணரசர்
வன்மாலை தம்மனத்தே சூட வயவேந்தைப்
பொன்மாலை சூட்டினாள் பொன்.

இதுவும் அடுத்த செய்யுளும் தமயந்தி நளனுக்கு மணமாலை சூட்டிய நிகழ்ச்சியைக் கூறும்.

விண் அரசர் எல்லாரும் - நளனுருவங்கொண்டு சென்ற இந்திரன் முதலிய தேவலோகத் தலைவர் எல்லாரும், வெள்கி-வெட்கமடைந்து, மனம் சுளிப்ப-தம்மைத் தாமே வெறுத்து மனம் வருந்தவும்; கண் அகல் ஞாலம் களிகூர - இடமகன்ற பூமியிலுள்ள நன்மக்கள் யாவரும் களிப்பு மிகவும்; மண் அரசர் வன்மாலை தம் மனத்தே சூட-பூவுலக அரசர் அறிவு கலங்கிப் பெரிய மன மயக்கங் கொள்ளவும்; பொன்-தமயந்தி; வயவேந்தை - வெற்றி வேந்தனாகிய நள னுக்கு; பொன்மாலை சூட்டினாள்-பொன் போலும் அழகிய ஒளி மிக்க சுயம்வர மாலையைச் சூட்டினாள்.

தேவர்கள் தம் செய்கைக்கு நாணங் கொண்டு நனி வருந்தவும், பெரியோர் மனம் மகிழவும், மண்ணரசர் அறிவு மயங்கித் திகைக்கவும், தமயந்தி நளனுக்கு மணமாலை சூட்டினாள்.

தாம் மண்ணவர் வணங்கும் தேவராயிருந்தும் தமயந்தியின் மணமாலை பெறுமையினால் பெரிதும் வெள்கி னர். தமது சூழ்ச்சி பலியாமையால் அவமானத்தால் மனம் உளைந்தனர். சுளித்தல் - மிக வருந்துதல்.

பூலோகம், தேவலோகம் இரண்டும் இட்ட போட்டி யில் வெற்றி பூவுலகிற்கே கிடைத்தமையின் ஞாலம் களி கூர்ந்தது.

மண்ணரசர் வன் மாலை தம் மனத்தே சூட - ஏமாற்ற மடைந்த மண்ணரசர் அதை வெளிக் காட்டாது அறிவு கலங்கி மனம் புழுங்கினர். மாலை - மயக்கம். வன்மாலை - மிதமிஞ்சிய மயக்கம்: பாரமான மாலை என்னும் மற்றொரு பொருளும் தொனிக்கும். அதாவது நளன் பெற்றது

மெல்லிய பூமாலை; இவர்கள் பெற்றது உறுதியான, கல்லாற் செய்யப்பட்டத் போன்ற வலிய மாலை. தம் மனத்தே - நளனது மாலை கழுத்தின் கண்ணது; இவர்கள் மாலை மனத்தின் கண்ணது. சூட-நளனுக்கு மாலையைத் தமயந்தி சூட்டினுள்; இவர்கள் 'எங்களுக்கும் ஒரு மாலை இல்லா மற் போகவில்லை' என்பவர் போன்று தாங்களே அதனைச் சூட்டிக்கொண்டனர். ஆக இச் சொற்றொடர் மண்ணரசர் மன நிலையை ஒருவாறு உணர்த்தும்.

வயவேந்து - வெற்றி வேந்தனுகிய நளன். அவனோடு போர் செய்து முயன்று பார்க்கலாம் என்றால், அதனாலும பயனில்லை; வெற்றி நளனுக்கேயாம் என்று அவ்வரசர் கருதியமையை ஒட்டி, 'வயவேந்து' எனப்பட்டது. பொன் மாலை-அழகிய மணமாலை. பொன் - இலக்குமி போன்றவ ளாகிய தமயந்தி.

பக்கம் 12.

7. திண்டோள் வயவேந்தர் செந்தா மரைமுகம்போய்
வெண்டா மரையாய் வெளுத்தவே—ஒண்டாரைக்
கோமாலை வேலான் குலமாலை வேற்கண்ணாள்
பூமாலை பெற்றிருந்த போது.

திண்தோள் வய வேந்தர்-திண்ணிய தோளை யுடைய வெற்றியையுடைய (மாலை பெறு) அரசரது; செந்தாமரை முகம் போய்-செம்மையாகிய தாமரை போன்ற முகம் மாறி; வெண் தாமரையாய் வெளுத்த - வெண்மையாகிய தாமரையைப் போன்று வெளிறிப்போயின.

(எப்பொழுது எனின்:—) ஒள் தாரை கோ மாலை வேலான் - ஒளியையும் கூர்மையையும் உடைய சிறந்த வெற்றிமாலை சூட்டப்பெற்ற வேற்படையையுடைய நளன்; குல மாலை வேல் கண்ணாள் - குலத்திற்கு மாலைபோன்று

சிறப்பினைத் தருகின்ற வேல்போன்ற கண்ணையுடைய தமயந்தியினது; பூமாலை பெற்றிருந்தபோது - திருமணத்திற்குரிய பூமாலையைப் பெற்று அழகுற வீற்றிருந்த பொழுது.

பூவுலக அரசர் மறைக்க முயன்றும் அகத்திலே எழுந்த ஏமாற்றம் முகத்தில் வெளிப்பட்டது.

மாலைவேல் - வெற்றி மாலையால் அலங்கரிக்கப்பட்ட வேல்; அத்தகைய வேலையுடைய நளன்.

சுயம்வர மண்டபத்தில் அலங்கார மாலைகள் எங்கும் காணப்படுவது போன்று, தமயந்தி மணமாலை சூட்டிய நிகழ்ச்சியைக் கூறும் இவ்விரு செய்யுள்களிலும் 'மாலை' என்னும் சொல் பலமுறை வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

குலம்-பிறந்த குலமும் புகுந்த குலமும்: இரு குலங்களையும் விளங்கவைப்பவள் என்பது கருத்து.

பக்கம் 15.

8. " தீது வருக நலம்வருக சிந்தையால்
சூது பொர இசைந்து சொல்லினோம்—யாதும்
விலக்கலிர் நீர் '' என்றான் வரால்ஏற மேதி
கலக்கலை நீர் நாடன் கனன்று.

"தீது வருக-(இச் சூதாட்டத்தினால்) தீமையே வருவதாக: (அன்றி) நலம் வருக-நன்மையே வருவதாக; (அதைப் பற்றிய ஆராய்ச்சி தேவையில்லை; ஏனெனில்,) சிந்தையால்-மனப்பூர்வமாக; சூது பொர-சூதாட்டமாகிய போர் செய்ய; இசைந்து சொல்லினோம் - சம்மதித்து வாக்களித்துள்ளோம்: (கொடுத்த வாக்கை நிறைவேற்ற வேண்டுமாதலால்), யாதும் விலக்கலிர் நீர் - எவ்வகையினாலும் இதனை

நீவிர் தடுக்காதீர்கள்;" என்றான் - என்று முடிவாகக் கூறினான்.

(யார் எனின்:—) வரால் ஏற மேதி கலக்கு அலைநீர் நாடன்-வரால் மீன் தம்மீது ஏறுதலால் எருமைகள் நீரைக் கலக்க அலைகள் எழுகின்ற நீர்வளம் மிக்க நாட்டையுடைய அரசனாகிய நளன்.

(எங்ஙனம் கூறினான் எனில்:—) கனன்று - கோபங் கொண்டு (கூறினான்.)

நாடன், கனன்று "தீது வருக: நலம் வருக: சூது பொர சிந்தையால் இசைந்து சொல்லினோம்; (ஆதலால்) நீர் யாதும் விலக்கலிர்" என்றான்.

கோப மிகுதியினால் "யாதும் விலக்கலிர் நீர்" என்று சொற்கள் வரிசை மாறி வந்தன. அடை மொழிகள் மந்திரிமார் சிந்தனையை ஒட்டி வந்தனவாகும். 'நீர்வளம் மிக்க நாட்டைச் சூதினால் இழக்கப்போகின்றானே' என்று மந்திரிமார் கருதியதாகப் பொருள் கொள்ளலாம்; இன்றேல், வரால் மீன்கள் தமக்குரிய நீர் நிலையிலே வந்த எருமைகளின்மீது ஏற, அவை வீணாக அஞ்சி, நீரைக் கீழ் மேலாக அலை யெறியும்படி கலக்கியது போன்று, தாம் தம் கடமைக்குரியவாறு நன்மதி கூற, தம் மனம் வருந்தும்படி கோபிக்கின்றானே என்று எண்ணியதாகவுங் கொள்ளலாம்.

'வாய்மை நளன்' என்று முன்பு கூறியமைக்கு இச் செய்யுள் சான்று பகரும்.

பக்கம் 16.

9. " வேலை கரையிழந்தால் வேதம் நெறிபிறழ்ந்தால்
ஞாலம் முழுதும் நடுவிழந்தால்—சீலம்
ஒழிவரோ செம்மை உரைதிறம்பாச் செய்கை
அழிவரோ செங்கோ லவர்.

நளன் மாவிந்த நகர மக்களை நோக்கிக் கூறியது.

வேலை கரை இழந்தால் - கடல் நீர் எல்லை கடந்து உள்ளிட்டாலும்; வேத நெறி பிறழ்ந்தால் - வேதம் கூறும் நன்னெறிகளெல்லாம் பிழை பட்டாலும்; ஞாலம் முழுதும் நடு இழந்தால் - உலகிலுள்ள உயர்ந்தோர் யாவரும் நடுவு நிலைமையைக் கைவிட்டாலும்; செங்கோலவர் - செங்கோல் அரசர்கள்; சீலம் ஒழிவரோ - நல்லொழுக்கத்தைக் கை விடுவார்களோ? உரை திறம்பாச் செய்கை அழிவரோ - வாய்மை தவறாத செய்கையிற் குன்றுவார்களோ?

நீதிநெறி தவறாத அரசர்கள் எந்தக் காலத்தும் எந்த நிலைமையிலும், தம் ஒழுக்கத்தைக் கைவிட்டு வாய்மை நெறி தவறி வரம்பிகந்த காரியஞ் செய்ய மாட்டார்கள்.

கரை இழந்தால், பிறழ்ந்தால், நடுவிழந்தால் ஒவ்வொன்றிற்கும் உம்மை கூட்டுக.

உலகம் அழியும் ஊழிக் காலத்திலே காற்றினால் கடல் நீர் பொங்கி உள்ளிடும் என்பர்; அத்தகைய பேராபத்து நேரிட்ட காலத்தும் செங்கோல் அரசர் எல்லை கடந்த செயல் புரியார். வேதங் கூறும் செந்நெறி திரிபுணர்ச்சியினால் (விபரீத ஞானத்தால்) பிழைபட அனுட்டிக்கப்படினும், செங்கோலவர் அறிவு கலங்கித் தமக்குரிய சீரிய ஒழுக்கத்தினின்றும் விலகார். உலகிலுள்ள பெரியோர்களே கால வேறுபாடு முதலியவற்றால் நடுவு நிலைமை தவறினாலும், செங்கோலரசர் தம் வாய்மையை ஒரு பொழுதும் கைவிட மாட்டார்.

இச் செய்யுளும் 'வாய்மை நளன்' என்பதைத் தெளி படுத்துகின்றது.

பக்கம் 18.

20/3/52

10\. *கைதவந்தான் நீக்கிக் கருத்திற் கறையகற்றிச்*
செய்தவந்தான் எத்தனையுஞ் செய்தாலும்—மைதீர்
மகப்பெரு மானுடர்கள் வானவர்தம் ஊர்க்குப்
புகப்பெறார் மாதராய் போந்து.

இது முதல் மூன்று செய்யுள் மக்கட்பேற்றின் சிறப்பைப் பற்றிக் கூறும். நளன் தமயந்தியை நோக்கிக் கூறுவன இவை.

கைதவம் நீக்கி-வஞ்சனையை ஒழித்து; கருத்தில் கறை அகற்றி - மனத்திலே படிந்துள்ள சிறு குற்றங்களை முழுவதும் துடைத்து; செய்தவம்-இங்ஙனம் தன்னை முழுவதும் தூய்மையாக்கிக் கொண்டு செய்யும் தவத்தை; எத்தனை செய்தாலும் - எந்தப் பெரிய அளவிலே செய்து நிறைவேற்றினாலும்; மைதீர் மக பெறு மானுடர்கள் - குற்றத்தினின்றும் நீங்கிய (நற்குணமுள்ள) மக்களைப் பெறாத மானிடர்கள்; வானவர் ஊர்க்கு - தேவர் உலகினுள்ளே; போந்து புகப் பெறார் - அதன் வாயிலருகிலே சென்றாராயினும் உள்ளே புகமாட்டார்கள்: மாதராய்!-பெண்ணே!

மாதராய்!... மானுடர்கள் ... தவம் எத்தனையும் செய்தாலும்... வானவர் ஊர்க்குப் போந்து (உள்ளே) புகப் பெறார்.

குற்றம் தீர்ந்த மக்களாவார் பழி பாவஞ் செய்யாமைக்கு ஏதுவாய நற்குணமுள்ள நன்மக்கள். இத்தகைய நன்மக்களைப் பெற்றவர்களுக்கு எழுமை எழு பிறப்பினும் தீயவை வாரா என்பது ஆன்றோர் துணிபு. "எழுமை எழு பிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்காப், பண்புடை மக்கட் பெறின்."

55412 O31,1G5D,Ny8 54

தான், தம், எத்தனையும் என்பதிலுள்ள உம்மை - அசை.

பக்கம் 18.

11. "பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனும்மற்று
என்னுடைய ரேனும் உடையரோ—இன்னடிசில்
புக்களையும் தாமரைக்கைப் பூநாறும் செய்யவாய்
மக்களையிங் கில்லா தவர்.

மக்கட் பேற்றினுஞ் சிறந்த செல்வம் ஒன்றில்லை என்று கூறுகின்றது இச் செய்யுள்.

பொன் உடையரேனும்-பொன்னை மிகுதியாக உடையவரெனினும்; புகழ் உடையரேனும் - அப் பொன்னால் ஈதலைச்செய்து பெரிய புகழைப் பெற்றவரெனினும்; மற்று என் உடையரேனும்-வேறு பெருஞ்செல்வம் பலவற்றையும் உடையவரெனினும்;

புக்கு-(பெற்றோர் உண்ணும்பொழுது) தாமாக வந்து; இன் அடிசில் அளையும்-இனிய உணவுகளைத் துழாவுகின்ற; தாமரை கை-தாமரை மலர்போன்ற சிவந்த கையினையும்; பூ நாறும் செய்யவாய் - அத்தாமரை மலரின் மணங்கமழும் சிவந்த வாயையும் (உடைய); மக்களை - பிள்ளைகளாகிய செல்வத்தை; இல்லா தவர்-பெறாதவர்; இங்கு உடையரோ - இவ்வுலகில் ஒன்றை உடையவர் ஆவாரோ? ஆகமாட்டார்.

.........மக்களை இல்லாதவர்.........பொன் முதலியவற்றை உடையவரெனினும்.........இங்கு (ஒன்றை) உடையரோ?

மக்கட் பேற்றினைப் பெறாதவர் செல்வம் பெற்றாலும் அதனாற் பயனில்லாதவரே யாவார்.

பொன்னுடைய ரெனினும் என்பது பொன்னுடைய ரேனும் என்று மருவிற்று. புகழுடையரேனும், மற்றென்னுடையரேனும் என்பனவும் அப்படி மருவியனவே.

பக்கம் 18.

12. "சொன்ன கலையின் துறையனைத்தும் தோய்ந்தாலும்
என்ன பயனுடைத்தாம் இன்முகத்து—முன்னம்
குறுகுதலைக் கிண்கிணிக்கால் கோமக்கள் பால்வாய்ச்
சிறுகுதலைக் கேளாச் செவி."

மக்களைப் பெருதவர்க்கு மேலான இன்பம் இம்மையிலும் இல்லையாகும் என்று கூறுகின்றது இச்செய்யுள்.

சொன்ன கலையின் துறை அனைத்தும் தோய்ந்தாலும்-கரையில்லாத கல்வியாகிய கடலின்கண் அமைந்த துறைகள் எல்லாவற்றிலும் இறங்கி மூழ்கினாலும்; என்ன பயனுடைத்தாம்-உண்மையிலே பெற்ற இன்பப் பயன் யாதாகும்? ஒன்றுமில்லையாகும்.

(எது எனின்):—இன்முகத்து-இனிமையாகிய முகத்தினையுடைய; முன்னம் குறுகுதலை கிண்கிணிக் கால்-முன் பக்கத்திலே குறுகிய முகப்பினையுடைய கிண்கிணி என்னும் சதங்கையை அணிந்த; கோ மக்கள்-சிறந்த மக்களது; பால் வாய் சிறு குதலை-பால் மணங் கமழும் வாயினின்றும் வரும் சிறிய முற்ருத மழலைச் சொற்களை; கேளாச் செவி-கேளாத காது.

மக்கள் சிறு குதலை கேளாச் செவி.........துறையனைத்தும் தோய்ந்தாலும் என்ன பயனுடைத்தாம்.

தம் மக்கள் பழலை மொழி கேட்டு இன்பம் அனுபவித்தவரே, அதனை ஒத்த கேள்வியின்பத்தை உள்ளபடி

அனுபவிக்க வல்லவர்; ஆதலால் நூற்கேள்வியின் உண்மையான இன்பப்பயனை தம் மக்கள் மழலைமொழி கேளாதவர் உணரார் என்று கூறப்பட்டது. மக்களாகிய செல்வமில்லாதவர்க்கு மற்றெல்லாச் செல்வமிருந்தும் பயனில்லை; அதுபோலவே தம் மக்கள் மழலைமொழி கேளாதவர் அடையும் செவிச் செல்வமும் பயனற்றதாம்.

பக்கம் 20.

13. தேன்பிடிக்குந் தண்டுழாய் செங்கட் கருமுகிலை
மான்பிடிக்கச் சொன்ன மயிலேபோல்—தான்பிடிக்கப்
பொற்புள்ளைப் பற்றித்தா என்ருள் புதுமழலைச்
சொற்கிள்ளை வாயாள் தொழுது.

தேன்-வண்டுகள், பிடிக்கும் - (தேனை உண்ணும் பொருட்டுப்) பற்றிப் பிடிக்கின்ற, தண் துழாய்-குளிர்ச்சி பொருந்திய துளசி மாலையை அணிந்த, செங்கண் கருமுகிலை-சிவந்த கண்களையுடைய கரிய முகில் போன்று நீல நிறமுள்ள இராமபிரானை; மான் பிடிக்கச் சொன்ன மயிலேபோல்-(பொன்னிறமுள்ள அழகிய) மானைப் பிடித்துத் தரும்படி (மறுக்க இயலாதவாறு இன்சொற்களாற் கேட்ட) மயில் போன்ற சாயலையுடைய சீதாபிராட்டியைப் போன்று; தான் பிடிக்க-தான் கையினுல் தொட்டு விளையாடும் பொருட்டு; பொன் புள்ளை-பொன் மயமான அழகிய் பட்சியை; பற்றித்தா என்ருள்-உயிருடன் பிடித்துத்தா என்று கேட்டாள்.

(யார் எனின்):—புது மழலைச்சொல் கிள்ளை வாயாள்-புதுமை வாய்ந்த முற்ருத மழலைச் சொற்களை, கிளியினைப் போன்று இனிமையாகப் பேசுகின்ற வாயினையுடைய தமயந்தி.

(எங்ஙனங் கேட்டாள் எனின்):-தொழுது-கை கூப்பி வணங்கி (மறுக்க இயலாதபடி கேட்டாள்.)

சீதாபிராட்டி மாயமானைப் பற்றித் தரும்படி இராம பிரானைக் கேட்டது போன்று, தமயந்தியும் பொன்னிற முள்ள பட்சியைப் பிடித்துத் தரும்படி நளனைக் கேட்டாள்.

புது மழலைச்சொல் கிள்ளை வாயாள்-நாடு, நகரம் முதலியவற்றை இழந்தமை, மக்களைப் பிரிந்தமை— இவற்றையெல்லாம் மறந்து நளனைப் பிரியாது உடன் சென்ற மகிழ்ச்சியினால் தமயந்தியின் பேச்சு ஒரு புதிய இனிமையைப் பெற்றிருந்தமை குறிப்பாக உணர்த்தப் பட்டது. தொழுது-அவள் கேட்டது அப்பொழுதைய நிலைமைக்குப் பொருத்தமற்றது; ஆயினும் இனிய மழலை மொழிகளாற் கேட்டதை மறுப்பது கடினம்; அப்படி எண்ணினும் மறுக்க இடமின்றித் தொழுது கேட்டாள் என்று கொள்க.

பக்கம் 22.

14. தையல் துயர்க்குத் தரியாது தஞ்சிறகாம்
கையால் வயிறலைத்துக் காரிருள்வாய்—வெய்யோனை
வாவுபரித் தேரேறி வாவென் றழைப்பனபோற்
கூவினவே கோழிக் குலம்.

இச்செய்யுள் விடியற் காலத்தில் கோழிகள் கூவின என்று கூறுகின்றது.

தையல் துயர்க்கு தரியாது - உதவியற்ற பெண்பாலா கிய தமயந்தி அடைந்த துயரத்திற்கு ஆற்றாது; தம் சிற காம் கையால் வயிறு அலைத்து-தமது சிறகுகளாகிய இரு கைகளாலும் வயிற்றிலடித்துக்கொண்டு; கார் இருள்வாய்- கரிய இருள் உள்ள இரவிலேயே, வெய்யோனை-சூரியனை,

வாவு பரித்தேர் ஏறி வா-மிக வேகமாகத் தாவிச் செல்லு கின்ற குதிரைகள் பூட்டிய தேர்மீது ஏறி (விரைந்து)வா"; என்று அழைப்பனபோல்-என்று (உரத்துக்) கூப்பிடுவன போல்; கோழிக் குலம்-அக்காட்டிலுள்ள கோழிக் கூட்ட மெல்லாம்; கூவின-ஒருங்கு கூச்சலிட்டன.

விடியற்காலத்தில் கோழிகள் சிறகடித்துக்கொண்டு கூவுவது இயற்கை. கதையின் சந்தர்ப்பத்திற் கேற்றபடி, தமயந்தி தனியே இருந்து பட்ட துன்பத்தைப் பொறுக்க மாட்டாமல் சூரியனை விரைவில் வரும்படி அழைப்பது போன்று கூவின, என்று கவி தன் எண்ணங்களைக் கோழி களுக்கு ஏற்றிக் கூறியுள்ளார். இங்ஙனம் கூறுவது தற்குறிப்பேற்றம் எனப்படும். அடுத்த செய்யுளும் இங்ஙனமே அமைந்துள்ளது.

காரிருள் வாய் வெய்யோனை வாவு பரித்தேர் ஏறிவா என்று அழைப்பனபோல் கூவின: காரிருள் வாய் வா- பொழுது விடியும் வரையில் தாங்காது; இன்று, இந்தக் கரிய இருளிலேயே வா; வாவு பரித்தேர் ஏறி வா-ஒவ் வொரு நாளும் வருவதுபோல் வந்தாற் போதாது; இன்று தாவிச்செல்லும் குதிரைகள் பூட்டிய தேரில் ஏறி மிக விரைவாக (இக்கணமே) வா,......என்பனபோல் கூவின.

பக்கம் 23.

15. வான நெடுவீதி செல்லும் மணித்தேரோன்
தான மடந்தைக்குத் தார்வேந்தன்—போனநெறி
காட்டுவான் போலிருள்போய்க் கைவாங்கக் கானூடே
நீட்டுவான் செங்கரத்தை நின்று.

இச் செய்யுள் சூரியன் உதித்தான் என்று கூறு கின்றது.

வானம் நெடுவீதி செல்லும் - ஆகாயமாகிய நீண்ட வீதியிலே செல்லுகின்ற; மணித்தேரோன்-அழகிய தேரை

யுடைய சூரியன்; தான் அ(ம்)மடந்தைக்கு-தான் அந்த உதவியற்ற நிலையிலிருந்த பெண்ணாகிய தமயந்திக்கு; தார் வேந்தன் போன நெறி - மாலையை அணிந்த அரசனாகிய நளன் சென்ற வழியினை; காட்டுவான் போல்-சுட்டிக் காட்டுபவன் போன்று; இருள் போய் கைவாங்க-இருளானது முற்றாக நீங்கும்படி; நின்று செங்கரத்தைக் கானூடு நீட்டுவான்-(உதயகிரியின்மேல்) நின்று தனது சிவந்த கிரணங்களாகிய கைகளைக் காட்டினூடே நீட்டுவானாயினன்.

உதித்த சூரியனது கிரணங்கள் இருள் விலகும்படி காட்டினுள் ஊடுருவிச் சென்றன என்பது கருத்து.

கோழிகள் அழைத்த பெருங்குரலைக் கேட்ட சூரியன், 'நான் ஆகாய வீதியிலே நெடுந்தூரம் செல்ல வேண்டியவன்; ஆதலால் இப்பொழுது வந்து தையல் துயரைக் கவனிக்க நேரமில்லை; என்னாலான உதவி அவள் கணவன் சென்ற வழியைக் காண்பிக்கிறேன்' என்பவன் போன்று உதயகிரியில் தோன்றி நின்றபடி இருள் மிக்க அக்காட்டினூடே தன் கிரணங்களாகிய கைகளை நீட்டினான் என்பது கருத்து.

தான் அம் மடந்தை என்பதில் மகரங்கெட்டு, தான மடந்தை என்று ஆயிற்று.

பக்கம் 23.

16. செய்தபிழை ஏதென்னும் தேர்வேந்தே என்றழைக்கும்
எய்துதுயர்க் கரைகாணேன் என்னும்—பையவே
என்னென்னு தென்னென்னும் இக்கானின் விட்டேகும்
மன்னென்னு வாடும் அயர்ந்து.

(மயந்தி) 'செய்த பிழை ஏது' என்னும் - 'நீ இப்படித் தனியே விட்டுச் செல்லும்படி யான் செய்த

பிழை யாது?' என்று கூறுவாள்;'தேர் வேந்தே!' என்று அழைக்கும்-(பின்பு, அவனது வரவை எதிர்பார்த்து) 'தேர் வேந்தனே!' என்று உரத்த குரலில் அழைப்பாள்; 'எய்து துயர்க் கரை காணேன்' என்னும் - (அவன் வாராமையால்,) 'யான் வீழ்ந்துள்ள துயரமாகிய கடலுக்குக் கண்ணுக் கெட்டின மட்டும் கரையைக் காணேன்' என்பாள்; (இவ்வளவும் பேசிக் களைப்புற்றவள், பெரிதும் மனங் கலங்கிப் பின்பு ஒருவாறு அறிவு வரப் பெற்று,) 'என் என்னுதது என்' என்னும் - (யான் துன்பக் கடலில் வீழ்ந்து தனியே தத்தளிக்கும இந் நிலையிலும், 'உனக்கு என்ன துன்பம் வந்தது? என்று ஒரு வார்த்தைக் கேளாதது ஏதனுல்'? என்று கூறுவாள்: (பெரிதும் தளர்ந்த நிலையில், அரசன் தன்னை அறவே கைவிட்டான் என்றுணர்ந்து,) 'இக் கானின் விட்டேகும் யன்' என்னு - 'என்னை அரசன் இக் கொடிய காட்டிலா இப்படித் தனியே விட்டுச் செல்ல வேண்டும்'? என்று சொல்லி; அயர்ந்து - வேறு ஒன்றும் பேசவியலாது களைப்பு மேலிட்டு; வாடும் - நெருப்பிலிட்ட கொடி போன்று வாடுவாள்.

'செய்த பிழை ஏது? தேர் வேந்தே! எய்து துயர்க் கரை காணேன்' என்று முழுவதையும் கூற இயலாது, தளர்ச்சி மிகுதியில் ஒவ்வொன்றுகச் சொல்லினுள் என்பது தோன்ற, மூன்று வாக்கியமாகக் கூறப்பட்டது. 'கரை' என்றமையால் துயரமாகிய கடல் என்று கொள்ளப் பட்டது.

என் + என்னுதது + என்:—என்பது என்னென்னுத் தென் என்று இருக்கவேண்டும். இதில் தகரம் தொக்கு என்னென்னு தென்னென்னும் என வந்தது.

பக்கம் 24.

17. "அடையுங் கடுங்கானில் ஆடரவின் வாய்ப்பட்டு
உடையுமுயிர் நாயகனே ஓகோ—விடையெனக்குத்
தந்தருள்வாய்" என்றுதன் தாமரைக்கை
கூப்பினாள்
செந்துவர்வாய் மென்மொழியாள் தேர்ந்து.

'அடையும்-வந்தடைந்த; கடும் கானில்-(சேர்தற்கரிய) வெம்மையான காட்டில்; ஆடு அரவின் வாய்ப்பட்டு-கொலைத் தொழிலை யுடைய பெரும் பாம்பின் வாயிலே அகப்பட்டு; உயிர் உடையும்-(நடுக்கடலில் கப்பல் உடைந்து சிதைவது போன்று,) உயிர் அழியும்; நாயகனே-அத்தகைய உயிரின் தலைவனே! ஓகோ-ஐயோ!, எனக்கு விடை தந்தருள்வாய்-(உனது உடைமையாகிய) எனக்கு விடையளிப்பாயாக;' என்று-என்று சொல்லித் (தன்னைத் தேற்றிக் கொண்டு;) தன் தாமரைக் கை கூப்பினாள்-தனது தாமரை போலும் சிவந்த அழகிய கைகளைக் கூப்பி வணங்கினாள்: செம் துவர்வாய் மென் மொழியாள் - செவ்விய பவளம் போன்ற வாயினையும் மென்மையான இனிய மொழியினையுமுடைய தமயந்தி: தேர்ந்து - (தனக்கு நிகழ்ந்த துன்பங்களுக்கெல்லாம் தனது ஊழ்வினையே காரணம்; நாயகன் நளன் மீது எவ்விதமான பிழையும் இல்லை என்பதைத்) தெளிவாக அறிந்து.

...மென் மொழியாள் தேர்ந்து, '...உயிர் உடையும்; நாயகனே!; விடை யெனக்குத் தந்தருள்வாய்' என்று... கை கூப்பினாள்.

ஆடு அரவு-அடுகின்ற பாம்பு; கொல்லுதலைத் தொழிலாகக் கொண்ட பாம்பு. உடையும்:—முந்திய செய்யுளில் 'எய்து துயர்க் கரை காணேன்' என்றமைக்கு இயைய, 'உயிர் (ஆகிய கப்பல்) உடையும்' என்று கூறப்பட்டது.

வழி தெரியாத கானகமாகிய கரைகாணுத் துன்பக் கடலில், திசை தெரியாது பாம்பின் வாயாகிய கற்பாறையிலே மோதுண்டு எனது உயிராகிய மாக்கலம் உடைந்து முழுகப் போகின்றது என்று ஏற்றவாறு விரித்துப் பொருள் கொள்க.

செம் துவர் வாய் மென் மொழியாள்:—முடிவு காலத்தில் தன் மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு, எல்லாம் தன் பிழையால் நேர்ந்தன என்று நிச்சயித்து, அகக் கண் முன்னே நளனைக் கண்டு அடைந்த மனஆறுதல், செம் துவர் வாயாகவும், மென் மொழியாகவும் பரிணமித்தது.

பக்கம் 26.

18. அவ்வளவில் ஆதிப் பெருவழியில் ஆய்வணிகன்
இவ்வளவு தீவினையேன் என்பாள்தன்-மெய்வடிவைக்
கண்டான் ஐயுற்ருன் கமலமயிலே என்ருன்
உண்டாய எல்லாம் உணர்ந்து.

அவ்வளவில்-(தமயந்தி காட்டில் ஒரு பக்கம் இருந்து அழுதுகொண்டிருந்த) அப்பொழுது; ஆதிப் பெரு வழியில் - ஆதி காலந் தொட்டு உள்ளதாகிய பெரிய வழியில் (சென்ற); ஆய் வணிகன் - எதையும் ஆராய்ந்து உண்மை காணும் பண்புள்ள வணிகன் ஒருவன்; 'இவ்வளவு தீவினையேன்' என்பாள் தன் மெய் வடிவைக் கண்டான்-'இவ்வளவு கொடிய பாவியா நான்?' என்று சொல்லிப் புலம்பியவளது உண்மை உருவத்தைக் கண்டான்; ஐயுற்ருன் - (முதலில்) சந்தேகங் கொண்டான்; கமல மயிலே என்ருன் - (பின்பு) தாமரையிலுள்ள இலக்குமிக்கு ஒப்பானவளே இவள் என்று தெளிந்தான்; உண்டாய எல்லாம் உணர்ந்து - அவளுக்கு நேர்ந்தவற்றை யெல்லாம் உய்த்துணர்ந்து.

அவ்வளவில்... வழியில் ஆய் வணிகன் ...... கண்டான்; ஐயுற்ருன்; உண்டாய எல்லாம் உணர்ந்து, கமல மயிலே என்ருன்.

வாணிபத்தின் பொருட்டுக் கொண்ட பெரும் பொருளுடன் செல்பவனுதலின், புதிய குறுக்கு வழிகளிற் செல்லாது பழைமையாகிய நெடு வழியிற் சென்ருன். அவன் 'ஆய் வணிகன்' என்பது அடுத்த இரண்டு செய்யுட்களாலும் விளங்கும். 'இவ்வளவு தீவினையேன்' என்று சொல்லியழுத ஒலி காதில் விழுந்ததும், குரல் வந்த வழியே சென்று தமயந்தியின் மெய் வடிவைக் கண்டான்; கண்டதும் பெரிய இடத்திற்குரிய அவள் அக் காட்டில் வரக் காரணம் யாதோ? என்று முதலில் சிறிது ஐயுற்ருன். தன் பிழையாலன்றி, ஊழ்வினையால், நாயகனைப் பிரிந்து வருந்துகின்றவள் எல்லாப் படியாலும் இலக்குமிக்கு ஒப்பான நிலையினளே என்று ஆராய்ந்துணர்ந்தான்.

பக்கம் 26.

19. "எக்குலத்தாய் யார்மடந்தை யாதுன்னூர்
யாதுன்பேர்
நெக்குருகி நீயழுதற்கு என்னிமித்தம்—
மைக்குழலாய்
கட்டுரைத்துக் காண்" என்ருன் களிவண்டு
காந்தாரம்
விட்டுரைக்குந் தார்வணிகர் வேந்து.

'எக்குலத்தாய் - எந்தக் குலத்திலே தோன்றியவள்? யார் மடந்தை-யாருடைய மகள்? யாது உன் ஊர் - எது உனது ஊர்? யாது உன் பேர் - எது உனது பெயர்? நீ நெக்குருகி அழுதற்கு நிமித்தம் என்-நீ மனமுடைந்துருகி (இங்கே) அழுவதற்குக் காரணம் யாது? மைக்குழலாய் -

கரிய கூந்தலை யுடையவளே! கட்டுரைத்துக் காண் - உண்மையை உள்ளபடி சொல்லுவாயாக' என்றான்-என்று வினவினான். (யாவன் எனின்:—) கார் வண்டு - கரிய நிற முள்ள வண்டுகள்; காந்தாரம் விட்டுரைக்கும் - (தேனை உண்ட களிப்பு மிகுதியினால்) காந்தாரம் என்னும் பண்ணை வாய்விட்டுப் பெருங் குரலில் இசைக்கும்; தார்-மாலையினை யணிந்த; வணிகர் வேந்து-வணிகர் தலைவன்.

ஆய் வணிகன் ஆதலின் தமயந்தியின் நிலைமையைத் தெளிவாக அறியும் பொருட்டு ஐந்து வினாக்களைத் தொடர்ந்து வினவினான். அவள் தலைவிரி கோலமாய் இருந்தமையின் 'மைக்குழலாய்' என்று விளித்தான்.

களிவண்டு முதலிய அடை மொழிகள் அவனது உபகார சீலத்தை யுணர்த்தும். (செய்யுள்:- 2.) பல வினாக் களை ஒரு தொடராக வினவிய முன்பின் அறியாத ஒருவன் எத்தகையவனோ என்று தமயந்தி சிறிதே நிமிர்ந்து பார்க்க, அவள் கண்ணுக்குத் தோன்றியபடி அவன் தோற்றம் வருணிக்கப்பட்டது. தன் மாலையில் உள்ள தேனை உண்ணக் கொடுத்ததுமன்றி அவ் வண்டுகள் செய்யும் ஆரவாரத்தையும் பொறுப்பவன் உதவி செய்யும் பண்பினன் என்பதை அவள் அறிந்து, மனந்தேறி அவனுக்கு விடை கூறத் துணிந்தாள் என்று உய்த்துணர்க.

பக்கம் 21.

20. "முன்னை வினையின் வலியான் முடிமன்னன்
என்னைப் பிரிய இருங்கானில்—அன்னவனைக்
காணு தழுகின்றேன்" என்றாள் கதிரிமைக்கும்
பூணாரம் பூண்டாள் புலர்ந்து.

'முன்னை வினையின் வலியால் - முன் பிறவிகளிலே யான் செய்த தீவினையின் வலிமையினாலே; முடி மன்னன்-

என் தலைவனாகிய முடியுடைய அரசன்; என்னைப் பிரிய - என்னைப் பிரிந்து சென்றபடியினால்; இரும் கானில் - இந்தப் பெரிய காட்டில்; அன்னவனைக் காணாது - அத்தகையவனைத் தேடிக் காணாமையால்; அழுகின்றேன் - தன்னந் தனியே இருந்து புலம்புகின்றேன்;' என்றாள் - என்று விடையளித்தாள்: கதிர் இமைக்கும் பூண் ஆரம் பூண்டாள் - ஒளி வீசுகின்ற ஆபரணமாகிய முத்து மாலையை அணிந்த தமயந்தி: புலர்ந்து - மிகவும் வாடி.

தன் நாயகன் பிழை ஒன்றுமில்லை; எல்லாவற்றிற்கும் தான் முன்பு செய்த தீவினையே காரணம் என்பதை உணர்த்த வேண்டி, 'முன்னை வினையின் வலியால்' என்று முதலிற் கூறினாள்.

'கதிரிமைக்கும்' முதலிய அடைமொழிகள் வணிகன் சிந்தனையை ஒருவாறு உணர்த்தும் பொருட்டு வந்தன. 'முடிமன்னன் என்னைப் பிரிய' என்று கூறக் கேட்டதும், ஆய்வணிகன் அவள் கூற்றின் உண்மையைத் தெளியும் பொருட்டு, அவளை மற்றொரு முறை பார்த்திருப்பான்; அப்பொழுது அவள் அணிந்த ஆரம் கண் கூசும்படி ஒளி வீசிற்று. உடனே ஐயம் நீங்கப்பெற்றான் என்று உய்த்துணரும்படி தமயந்தியின் அப்பொழுதைய தோற்றம் வருணிக்கப்பட்டது.

புலர்ந்து - தான் வினவிய வினாக்கள் சிலவற்றிற்கு விடை கூறவில்லை. அவள் கூறியதெல்லாம் உண்மையென்று உணர்ந்தவன் மிகத் தளர்ந்து வாடி மேலே ஒன்றும் பேச இயலாத துன்ப நிலையைக் கண்டு, அவளை ஊர், பேர் முதலிய கூறும்படி வற்புறுத்தவில்லை, என்பதை உணர்த்தும் பொருட்டு இச்சொல் ஈற்றில் வைக்கப்பட்டது.

பக்கம் 30.

21\. "போவாய் வருவாய் புரண்டு விழுந்திரங்கி
நாவாய் குழற நடுங்குறுவாய்—தீவாய்
அரவகற்றும் என்போல ஆர்கலியே மாதை
இரவகற்றி வந்தாய்கொல் இன்று."

கடலை நோக்கி நளன் கூறுகின்றான்.

"போவாய்-(மனைவியைப் பனியிருளில் பாழ் மண்டபத்திலே கைவிட்டு நான் சென்றது போல) நீயும் சிறிது தூரம் போவாய்; வருவாய்-(பின்பு அவள் நிலைமையை நினைந்து சிறிது பின்வாங்கி நான் மீண்டும் அவளிருக்குமிடம் சென்றது போல) நீயும் திரும்பி வருவாய்; புரண்டு விழுந்திரங்கி நாவாய் குழற நடுங்குறுவாய்-(பின்பு அவளை முற்றாக விட்டுப் பிரிந்த நான் துயர மிகுதியினால் நிலத்தில் விழுந்து புரண்டு மனம் வருந்தி வாயிலுள்ள நாக் குழறும்படி மனம் நடுங்கியது போன்று) நீயும் அலை எழுந்து புரண்டு, மறுபடியும் விழுந்து ஆரவாரஞ்செய்து கப்பல்கள் திசை தடுமாறும்படி கனைகுரலோடு நடுங்குவாய்;

(ஆதலால்) தீவாய் அரவு அகற்றும் என்போல-அறிவு கலங்கிய நிலையில் நெருப்பில் அகப்பட்ட பாம்பை அந் நெருப்பினின்றும் அகற்ற முற்பட்ட என்னைப் போலவே; ஆர்கலியே-கடலே! மாதை-நின் மனைவியை, இன்று இரவு அகற்றி வந்தாய் கொல்-இன்றைய இரவில் கைவிட்டு வந்தனையோ?"

தமயந்தியைப் பிரிந்த துயரம் மிதமிஞ்சிய நிலையில், அறிவு மிகக் கலங்கி, மரம் என்றும், புள் என்றும், கடல் என்றும் பாராது, அவைகளும் தன்னைப்போன்று அறிவு படைத்தன எனக்கொண்டு, விளித்துச் சில கூறலுற்றான்.

'போவாய்.........நடுங்குறுவாய்' - நளனுக்கும் கடலுக்கும் சிலேடை. புரண்டு விழுந்து இரங்கி-நளனுக்குக் கொள்ளும் பொழுது, விழுந்து புரண்டு இரங்கி என மாறுக. நாவாய் குழற:—1. வாயின் நாக் குழறும்படி (நளனுக்கு). 2. நாவாய்கள் தடுமாறும்படி (கடலுக்கு). நாவாய்-கப்பல்.

மனைவியை அகற்றல், அரவை அகற்றல்-இரண்டுக்கும் உள்ள வேறுபாட்டினை உணராமலே, நளன் இரண்டையுஞ் செய்தான்; அறிவு மிகக் கலங்கிய நிலையில் அவன் மனம் எதனையேனும் அகற்றுவதில் முனைந்து நின்றது.

பக்கம் 31,

22. "ஒண்டொடி தன்னை உறக்கத்தே நீத்ததுவும்
பண்டை விதியின் பயனேகாண்—தண்டரளப்
பூத்தாம வெண்குடையான் பொன்மகளை வெவ்
வனத்தே
நீத்தானென்று ஐயுறேல் நீ."

நளன் தமயந்தியால் அனுப்பப்பட்ட வேதியனிடம் கூறியது.

ஒள் தொடி தன்னை-ஒளி பொருந்திய வளையல்களை அணிந்த மனைவியை; உறக்கத்தே நீத்ததுவும்-நித்திரைசெய்யும் பொழுது விட்டுப் பிரிந்ததுவும்; பண்டை விதியின் பயனே காண்-முற்பிறப்பிற் செய்த தீவினையின் விளைவேயாகும்; இதனை நீ தெளிவாயாக; தண் தரள பூ தாம வெண் குடையான்-குளிர்ச்சி பொருந்திய, அழகிய முத்து மாலைகளால் அலங்கரிக்கப்பட்ட வெண்குடை வேந்தன்; பொன்மகளை - திருமகளை ஒத்த தன் மனைவியை; வெவ் வனத்தே-வெம்மை மிக்க காட்டிலே; நீத்தான் என்று -

(அன்பின்மையால்) வேண்டுமென்று விட்டுச் சென்ருன் என்று; ஐயுறேல் நீ-ஏனையோர் ஐயங்கொண்டாலும் (எல்லாம் அறிந்த) நீ ஐயுருதே.

'விழித்த பின்பு பிரியின் அவள் படும் துயரைக் காணப் பொருமையினலன்றே அவ்வரசன் துயிலும் பொழுது பிரிந்தான். குறையாத அன்பினன் தன் மனைவியைப் பிரிய நேரிடின் அஃது ஊழ்வினையின் விளைவேயன்றி வேறு யாதாகும்? இதனை நீ சிந்தித்து உணர்வாய். மேலும் உலகம் முழுவதையும் தன் வெண்குடை நிழலில் வைத்துப் பாதுகாக்கும் அரசன் உதவியற்ற பெண்பால் ஒருத்தியைப் பாதுகாக்கத் தவறுவானே? உலகிற்கெல்லாம் தண்மை விளக்கும் வெண்குடை வேந்தன் பெறுதற்கரிய பேருப் பெற்ற திருமகளை ஒத்த தன் காதல் மனைவியை வெம்மை மிக்க காட்டில் கைவிட்டுச் செல்லுவானே? ஆதலால் அன்னவன் வேண்டுமென்று, அன்பின்மையால் நீத்தான் என்று வேறு யாரேனும் எண்ணினும் எல்லாம் அறிந்த நீ சிறிதும் ஐயுறவேண்டாம்' — என்று ஏற்ற பெற்றி பொருளை விரித்துரைத்துக் கொள்க.

பக்கம் 34.

23. "கன்னி நறுந்தேறன் மாந்திக் கமலத்தின்
மன்னித் துயின்ற வரிவண்டு—பின்னையும்போய்
நெய்தற் கவாவும் நெடுநாட நீஎன்பால்
எய்தற் கவாவியவா றென்."

விதர்ப்ப நாட்டரசன் அயோத்தி வேந்தன் இருதுபன்னனை நோக்கிக் கூறியது.

'கன்னி நறும் தேறல் மாந்தி-புதிய நல்ல மணமுள்ள தேனை வேண்டிய மட்டும் உண்டு; கமலத்தில் மன்னித்

துயின்ற வரிவண்டு - (உண்ட களிப்பு மிகுதியினால்) அத் தாமரையிலேயே தன்னை மறந்து துயில் கொண்ட வரிகளை யுடைய வண்டு; பின்னையும் போய் நெய்தற்கு அவாவும் - (எல்லா இன்பத்தையும் அத் தாமரையிலேயே பெற்றிருந் தும் திருப்தியின்மையினால்) தூரத்திலுள்ள கரு நெய்தற் பூவினையும் விரும்புகின்ற; நெடுநாட - பெரிய நாட்டை யுடையவனே! நீ-எல்லாவற்றையுமுடைய நீ; என்பால் - என்னிடம்; எய்தற்கு அவாவியவாறு என் - வருதற்கு அவாக் கொண்ட விதம் யாது?

'கன்னி நறுந்தேறல்.........அவாவும்' முதலிய அடை மொழிகள் வெளிப்படையாக இருதுபன்னனது நாட்டின் சிறப்பினையுணர்த்தும். குறையொன்றுமில்லாத நீர் நில வளங்கள் மிக்க நாட்டரசனாகிய நீ இங்ஙனம் வரக்காரணம் யாது? என்று வெளிப்படைப் பொருள் தோன்ற வினவினான்.

ஆனால் அவன் அவசரப்பட்டு வந்தது அறிவீனம் என்பதையும் குறிப்பாகச் சுட்டி வினவுகின்றான். ஏற் கனவே எல்லா இன்பங்களையும் அனுபவிக்கின்ற நீ மற் றொருவன் மனைவியின் மாலையைப் பெற முற்பட்டது உனது நாட்டு வண்டுகளின் செயலைப் போன்றதன்றோ? இங்ஙனம் உனது அறிவு கலங்கி, தகாத ஒன்றை அவாவிய காரணம் யாது? என்னும் குறிப்புப் பொருளும் தோன்ற வினவுகின்றான்.

பக்கம் 34.

24. "இன்றுன்னைக் காண்பதோர் ஆதரவால் யானிங்ஙன்
மன்றன் மலர்த்தாராய் வந்தடைந்தேன்"—என்றான்
ஒளியார்வேற் கண்ணாள்மேல் உள்ளந் துரப்பத்
தெளியாது முன்போந்தசேய்.

இருதுபன்னனும் சந்தர்ப்பத்திற்கேற்றபடி குறிப்புப் பொருளும் தொனிக்கும்படி சாமர்த்தியமாக விடை கூறுகின்றான்.

'இன்று உன்னைக் காண்பதோர் ஆதரவால்-ஏதோ இன்றையதினமே உன்னைக் காணவேண்டும் என்று மனத்தெழுந்த ஓர் ஆசையினால்; இங்ஙன்-இப்படி எதிர்பாராத விதமாய்: மன்றல் மலர்த் தாராய்-வாசனை வீசுகின்ற மலர் மாலையை அணிந்தவனே! வந்தடைந்தேன்-வந்து சேர்ந்தேன்;' என்றான்-என்று சொன்னான்.

(யாவன் எனின்):—ஒளி ஆர் வேல் கண்ணாள்மேல்-ஒளி பொருந்திய வேற்படைபோன்ற கண்ணையுடைய தமயந்தியினிடம்; உள்ளம் துரப்ப-(வேக) ஊக்கம் தூண்ட; தெளியாது - அறிவினால் ஆராயாது: முன்போந்த சேய்-அவசரப்பட்டு முன்வந்த இருதுபன்னன்.

'ஏதோ இன்றைக்கு உன்னைப் பார்க்கவேண்டுமென்ற ஓர் எண்ணம் தோன்றியபடியால் உடனேயே இப்படிப் புறப்பட்டு வந்தேன்; வேறு கருமம் இல்லை' என்பது வெளிப்படையாகக் கூறிய பொருள்.

'இன்று உன்னைக் காண்பதோர் ஆதரவால்'-இரண்டாம் சுயம்வரம் இன்றையதினம் நடைபெறும் என்று கேள்வியுற்றமையினால் 'இன்றைக்கே உன்னைக் காண வேண்டும் என்னும் ஆசையினால் வந்தேன்' என்றான். மன்றல் மலர்த்தாராய்-தமயந்தியின் மணமாலைபற்றிய எண்ணமே ஊன்றி நின்றமையின் வீமனை விளிக்கும் பொழுதும் இங்ஙனம் விளித்தான்: மன்றல் - திருமணத்தையும் குறிக்கும். வீமன் வினவிய பொழுதும் அந்த ஆசை முற்றும் நீங்கவில்லை: அதாவது மணமாலையை மறக்கவில்லை; ஆதலால் வாக்கியத்தை முடிக்குமுன்னரே

'மன்றன் மலர்த்தாராய்' என்று விளித்தான்: அதுமட்டு மன்றி 'வந்தேன்' என்னாது 'வந்தடைந்தேன்' என்று கூறினான். இவ்வளவும் கூறியபின்னரே அவனுக்குத் தன் பிழை நன்கு புலப்பட்டது, தான் ஆராயாது அவசரப்பட்டு வந்த அறிவீனத்தை உணர்ந்தான். ஈற்றிரண்டடிகளில் உள்ள அடைமொழிகள் இருதுபன்னன் தன் பிழையை உணர்ந்து சிந்தித்ததை உணர்த்தும் பொருட்டு வந்தன.

பக்கம் 35.

25. "மன்னன் நிடதத்தார் வாழ்வேந்தன் மக்கள்யாம்
அன்னைதனைக் கான்விட் டவனேக — இந்நகர்க்கே
வாழ்கின்றோம் எங்கள் வளநாடு மற்றொருவன்
ஆள்கின்றான்" என்றார் அழுது.

மன்னன் மக்கள் யாம் - அரசன் மக்கள் யாம்; நிடதத்தார் வாழ்வேந்தன் மக்கள்-(எந்நாட்டு அரசன் எனின்:) நிடத நாட்டு மக்கள் விரும்பி வாழ்தற்குக் காரணமான, அவர் அன்பைக் கவர்ந்த வேந்தனது மக்கள்: (அங்ஙனமாயின் இங்கு வாழக்காரணம் யாது எனின்:) அன்னைதனைக் கான் விட்டு அவன் ஏக-எங்கள் அன்னையைக் காட்டிலே விட்டு அவன் சென்றபடியால்; இந்நகர்க்கே வாழ்கின்றோம்-இந்நகரின்கண்ணே வாழ்கின்றோம்; (உங்கள் நாடு யாதாயிற்று எனின்:-) எங்கள் வள நாடு-எங்களுக்குரிய வளம் மிக்க நாட்டினை; மற்றொருவன்-அரசு முறை தெரியாத வேறொருவன்; ஆள்கின்றான் - ஆட்சி செய்கின்றான்; என்றார் அழுது-என்று அழுதுகொண்டு சொல்லினர்.

நளனுக்கும் மக்கள் இருவருக்குமிடையே நடைபெற்ற பேச்சின் சாரம் இச்செய்யுள்.

நளன்:—என்மக்கள் போல்கின்றீர்; யார் மக்கள் ?

மகள்:—மன்னன் மக்கள் யாம்.

மகன்:—நிடதத்தார் வாழ்வேந்தன் மக்கள்.

நளன்:—அங்ஙனமாயின் நீங்கள் இங்கு இருப்பதன் காரணம்?

மகள்:—அன்னையைக் காட்டிலே விட்டு அவன் சென்றான்.

மகன்:—ஆதலால் நாங்கள் இந்நகரில் வாழ்கின்றோம்.

நளன்:—உங்கள் நாடு?

மகனும் மகளும்:—எங்கள் வளநாடு மற்றொருவன் ஆள்கின்றான்—

—என்பதுபோன்று ஏற்றவாறு விரித்துக்கொள்க.

'மன்னன்' என்றமையால் பிறப்புரிமையினாலும், 'நிடதத்தார் வாழ்வேந்தன்' என்றமையால், நாட்டு மக்கள் அன்புரிமையினாலும் அரசச் செல்வம் பெற்றவன் என்பது கருத்து.

'இந்நகரின் கண்' என்றிருக்கவேண்டுவது 'இந்நகர்க்கே' என வேற்றுமை உருபு மயங்கியது; மக்கள் இடம் மாறியுள்ள நிலையைக் கூறும் சொல்லில் இவ்வாறு உருபு மயங்கியமை பொருத்தமாகும்.

மற்றொருவன்:—'மற்றொரு அரசன்' என்னுவது 'மற்றொருவன்' என்றமையால் அவன் 'அரசறியா வேந்தன்' என்பது விளங்கும்; கோபமும் அலட்சியமும் பயக் கூறினர்.

பக்கம் 37.

26. "பைந்தலைய நாக பணமென்று பூகத்தின்
ஐந்தலையின் பாளைதனை ஐயுற்று—மந்தி
தெளியா திருக்குந் திருநாடா உன்னை
ஒளியாது காட்டுன் உரு."

வீமராசன் உருவம் மாறி நின்ற நளனை நோக்கிக் கூறியது.

'பூகத்தின் ஐ தலையின் பாளைதனை-கமுக மரத்தினது அழகிய தலையிலுள்ள பாளையை; பைந்தலைய நாக பணம் என்று-பச்சை நிறத் தலையையுடைய பாம்பின் படமென்று; மந்தி-பெண் குரங்கு; தெளியா திருக்கும்-கமுகம் பாளையோ, பச்சைப் பாம்பின் படமோ என்று ஒரு முடிவிற்கு வரமாட்டாது நிற்கும்; திருநாடா-நீர் வளம்மிக்க அழகிய நாட்டையுடையவனே! உன்னை ஒளியாது-உன்னை மறைக்காமல்; உன் உரு காட்டு-உனது உண்மையான உருவத்தைக் காட்டுதி.

பெண் குரங்கு கமுகம் பாளையோ பசும்பாம்போ என்று தெளியமாட்டாது நிற்றல்போல, என் மகள், நீ நளனோ வேறொருவனோ என்று நிச்சயிக்க இயலாது திகைக்கின்றாள்; ஆதலால் இனியும் ஒளிக்காமல் உனது மெய்வடிவைக் காட்டுவாயாக என்பது குறிப்பு.

பக்கம் 39.

27. கார்பெற்ற தோகையோ கண்பெற்ற வாண்முகமோ
நீர்பெற் றுயர்ந்த நிறைபுலமோ—பார்பெற்று
மீதோடு மன்னன் வரக்கண்ட மாநகருக்கு
ஏதோ உரைப்பன் எதிர்.

பார் பெற்று-தன் நாட்டைப் பெற்று, மாதோடு-தன் மனைவியோடு, மன்னன் வரக்கண்ட மாநகருக்கு - தம் அரசனாகிய நளன் வர, அக் காட்சியைக் கண்ட (அளவிலா ஆனந்தம் அடைந்த) மாவிந்த நகர மாந்தருக்கு; எதிர் - ஒப்பாக; கார்பெற்ற தோகையோ - மேகத்தை தூரத்தே கண்ட மயிலேயோ? கண் பெற்ற வாள் முகமோ-இழந்த கண்ணைப் பெற்ற ஒளி பொருந்திய அழகிய முகத்தையோ? நீர் பெற்று உயர்ந்த நிறை புலமோ-(மழையின்மையினால் காய்ந்து கருகிய நிலையில்) வேண்டிய அளவு நீரைப் பெற்று அதனால் ஓங்கிய பயிர்கள் நிறைந்த வயலேயோ, ஏது உரைப்பன்-எதனைக் கூறுவேன்.

ஒரு உவமானம் போதியதன்று: மூன்றும் வேண்டும் என்பது கருத்து. (தூரத்திலே) மன்னன் வரக்கண்ட பொழுது மாந்தர் அடைந்த அகமகிழ்ச்சிக்குக் கார் பெற்ற தோகை உவமானம்: (சிறிது நெருங்கிவர,) மாதோடு மன்னன் வரக்கண்ட பொழுது, நகர மாந்தர் மகிழ்ச்சி முகத்தில் ஒளியாக வெளிப்பட்டது: அந்நிலையில் அவர்கள் அடைந்த பெரு மகிழ்ச்சிக்குக் கண்பெற்ற வாண்முகம் உவமானம். நகரின் எல்லையை யடைய, பார்பெற்று மாதோடு மன்னன் வரக்கண்ட நிலையில் மகிழ்ச்சியால் நகர மாந்தர் உடல் பூரித்து நின்றனர்; அத்தகைய அளவிலா ஆனந்தத்திற்கு நீர் பெற்றுயர்ந்த நிறைபுலம் உவமானம்.

இம் மூன்றனுள் ஏது உரைப்பன் என்றமையால், நகர மாந்தர் அகத்தெழுந்த ஆனந்தத்தைப்பற்றிக் கூறுவேனோ? அன்றி அது முகத்தில் வெளிப்பட்ட பண்பைச் சொல்லுவேனோ? அன்றி உடலும் பருக்கும்படி முதிர்ந்த ஆனந்தத்தைப்பற்றி உரைப்பேனோ? என்று ஏற்றவாறு விரித்துப் பொருள் கொள்க.

முற்றும்.

CONNEMARA PUBLIC LIBRARY